Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1316)
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 மாசி 26 வெள்ளிக்கிழமை (09.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 160



நோயாளர்கள் அவதி (03)



தென்னாசியாவில் முதலிடம் (08)



இன்னும் முடியவில்லை (13)




உங்களை விற்பதற்கு (10)

# ஜெனிவாவில் அமெரிக்காவின் பிரேரணை இந்தியாவின் முடிவு இதுவரை இல்லை



(புதுடில்லி)

ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை குறித்து இந்தியாவின் நிலைப்பாடு பற்றிய இறுதித் தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை மேற்படி அமெரிக்காவின் பிரேரணை குறித்து இந்திய மத்திய அரசு தனது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை இன்னமும் வெளியிடவில்லை.

அதேவேளை ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்து, இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான ஒட்டுமொத்தமான உறவுகள் மற்றும் இந்தியாவிலுள்ள உணர்வுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா தனது நிலைப்பாட்டை மேற்கொள்ளும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்தார். ஜெனிவாவில் எமது நிலைப்பாடு தொடர்பாக இறுதித்தீர்மானம் மேற் கொள்வதற்கு முன்னர் ஒவ்வொரு விடயங்களையும் நாம் கவனத்திற்கொள்வோம் என அவர் தெரிவித்தார். எனினும் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் நிறை வேற்றப்படும் தீர்மானங்கள் நன்மையை விடவும் தீமைகளையே அதிகம் ஏற்படுத்தும் என்பதே இந்தியாவின் பொதுவான நிலைப்பாடு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மரணத்தில் சந்தேகம் மீண்டும் பரிசோதனை

வரணிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தற்கொலை செய்ததாகக் கூறப்பட்ட பெண்ணின் மரணத்தில் சந்தேகம் இருப்பதனால் மீண்டும் பிரேதப் பரிசோதனை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

வரணிப் பகுதியில் தென்னிந்திய திருச்சபைக்குச் சொந்தமான தோட்டம் ஒன்றில் வவுனியாவைச் சேர்ந்த 18 வயது மதிக்கத்தக்க நிஷாந்தினி என்ற பெண் தங்கிநின்று பணியாற்றியுள்ளார். இவர் கடந்த செவ்வாய்க்கிழமை நஞ்சு அருந்தி மரணமானதாகத் தெரிவிக்கப் பட்டது. வழமையான விசாரணைகள் முடிந்த நிலையில் நேற்று சடலம்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க பிரேரணைக்கு எதிராக போராடுவதற்கு நாம் தயார்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள மனித உரிமைகள் மீறல் தொடர்பான பிரேரணையை முகம்கொடுக்கவும் அதற்கு எதிராகப் போராடவும் இலங்கை தயார் என்று ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தமரா குணநாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி பிரேரணை தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டைப் பல நட்பு நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளதால் இப் பிரேரணைக்கு எதிராக எம்மால் போராட முடியும் என்றும் அவர் மேலும தெரிவித்தார். தமது மேற்படி பிரேரணை தொடர்பாக ஜெனிவாவில் உபமாநாடு ஒன்றை அமெரிக்கா நேற்று நடாத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## மாதகலில் மீள்குடியமர்வு குறித்து ஜனாதிபதியுடன் பேசித்தீர்வு காணப்படும்

(யாழ்ப்பாணம்)

மாதகலில் இதுவரை அனுமதிக்கப்படாத பகுதிகளில் மக்களை மீள் குடியமர்த்துவது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசி உரிய தீர்வுக்ள் எட்டப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மாதகல் மேற்கில் அமைந்துள்ள தொழிலாளர் ஓய்வு மண்டபத்தில் அப்பகுதி மக்களுடன் நேற்றைய தினம் இடம்பெற்ற



கலந்துரையாடலின் போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார். இதன்போது பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் நிலைமைகள் (15 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் பிரேரணை துரதிஷ்டவசமானது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை அமெரிக்கா முன்வைத்துள்ளமை மிகவும் துரதிஷ்டவசமானது என நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறித்த பிரேரணையை தவிர்த்துக்கொள்வதற்காக நாம் பல முயற்சிகளை மேற்கொண்டோம். ஆயினும், அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டு அமெரிக்காவும் அதன் சில நேச நாடுகளும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை முன் மொழிந்துள்ளன. ஆனால், அரசாங்கம் உள்நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் காட்டிவரும் ஆர்வம் குறித்து மிகவும் தெளிவாக அறிந்து வைத்திருக்கும் எமது நேச நாடுகள் இந்த பிரேரணையை முறியடிப்பதற்கு ஒத்துழைப்பு

(15 ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு நுளம்பை ஒழிக்க சந்தைக்கு வருகிறது பற்றீரியா

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை ஒழிக்கும் பற்றீரியா விரைவில் விற்பனைக்கு வரவிருப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். வாய்மூல கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை ஒழிப்பதற்காக கியூபா நாட்டின் பற்றீரியா மற்றும் நாட்டில் உற்பத்தி

(15 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் பிரேரணை வரவேற்கிறது கூட்டமைப்பு



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்திருக்கும் மனித உரிமை மீறல் தொடர்பான பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றிருக்கிறது.

அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேரணை இலங்கைக்கு எதிரானது அல்ல எனவும் அது இலங்கைக்கு நன்மை தரக்கூடிய ஒன்றாகவே அமையும் எனவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். மேலும் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட பிரேரணை

(15 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சக்கர வண்டி போக்குவரத்து சேவை முதன்முறையாக களம் இறங்கும் பெண்கள்


(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கான முச்சக்கர வண்டி மூலமான போக்குவரத்துச் சேவையை யாழ். நகரில் பெண்கள் அணி ஒன்று முதன்முறையாக ஆரம்பித்துள்ளனர். மகளிர்தினமான நேற்றைய தினம் இதற்கான ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. இதன் முன்னோடி நடவடிக்கையாக வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட 10 குடும்பப் பெண்களுக்கு நேற்று பத்து முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இதனால் யாழ். மாவட்டத்தில் பெண்கள் முச்சக் கரவண்டியோட்டும் யுகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தினால் மகளிர் தினமான நேற்று நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் (15 ஆம் பக்கம் பார்க்க)



# அப்பாவி மக்களின் அவலத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் அற்பத்தனம் வேண்டாம்



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவைச் சேர்ந்த பதின்மூன்று வயது நிரம்பிய பாலகி ஜேசுதாசன் லக்சினி ஒரு காட்டுமிராண்டிக் காமுகனால் கடந்த சனிக்கிழமை (03.03.2012) படுகொலை செய்யப்பட்ட பாதகம் எமது நெஞ்சை பதற வைத்துள்ளது. இந்தப் படுகொலை தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதையும் பொலிஸார் இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதையும் நாம் வரவேற்பதுடன் இந்தப் பாதகத்தின் பங்காளிகள் அனைவரும் பாரபட்சமின்றி விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமெனவும் எமது மக்களனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் பகிரங்கமாகக் கோருகின்றோம் என்று யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவு சம்பவம் குறித்து வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நாட்டில் பால்ய வயதினருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில் எமது பகுதியில் அதற்கு இடமளிக்காமல் தடுத்து நிறுத்த சமூகப் பொறுப்புள்ள அனைவரும் முன்வர வேண்டும்.

இந்நிலையில் இவ்வாறான பாதகச் சம்பவங்களை சமூகப் பொறுப்புடன் அணுகி இதன் பரிமாணங்களைப் பகுத்தாய்ந்து பரிகாரம் காண உதவ வேண்டிய நிலையில் ஒருசில ஊடகங்கள் பொறுப்பற்ற வகையில் இந்தச் சம்பவத்திற்கு அரசியல் சாயம் பூசி ஆதாயம் தேட முயல்வது ஆரோக்கியமானதல்ல.

இந்தச் சம்பவத்துடன் தொடர்பான சந்தேக நபரை எமது கட்சியுடன் தொடர்புபடுத்தி அவதூறுகளைக் கிளப்பியுள்ள ஒரு சில ஊடகங்கள் பாரிய சமூகப் பிரச்சினையாக நிகழத் தொடங்கக் கூடிய இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் எவரும் கரிசனை கொண்டு அவற்றின் மூலங்களைக் கண்டறிந்து அவற்றைக் களைய முனைவதைத் தடுக்க முயல்வதாகவே கருத இடமுண்டு.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வருகின்ற தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானவர்கள் அவர்களது பல்வேறு தேவைகள் குறித்தும் அரசியல் குறித்தும் இணக்க அரசியலில் ஈடுபட்டு வருகின்ற எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டியவர்களாகவே இருக்கின்றனர்.

அந்த வகையில் எமது மக்கள் எவராயினும் எப்போதும் - எந்நேரமும் நேரில் சந்தித்து நிவாரணம் பெறக் கூடிய நிலையிலும் கலந்துரையாடக் கூடிய நிலையிலும் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் எமது கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே என்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக தீவுப் பகுதிகளில் ஆரம்ப காலந்தொட்டு எமது தொடரும் அரசியல் வேலைத்திட்டங்களின் ஊடாக இப்பகுதி மக்களுடனான எமது கட்சியின் நெருக்கம் ஒன்றரக் கலந்ததாகவே இருந்து வருகிறது. எனவே இப்பகுதி மக்களில் பெரும்பாலானவர்கள் தினசரி எம்மிடம் வந்து போகின்றவர்களாகவும் தொடர்ந்தும் எம்முடன் தொடர்பிலுள்ளவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

இந்நிலையில் இவர்கள் அனைவரையும் எமது கட்சி உறுப்பினர்கள் எனச் சொல்வது அரசியல் உள்நோக்கமுள்ள அவதூறன்றி வேறேதுமில்லை.

இந்தச் சம்பவத்தில் கைதாகியுள்ளவர் ஏற்கனவே சில சமூக விரோத குற்றச் செயல்களில் கைதாகி சிறை சென்றவர் எனவும் இப்போதும் கூட சமூக விரோத குற்றச்சாட்டொன்று தொடர்பில் பொலிஸாரின் கண்காணிப்பில் உள்ளவர் எனவும் எமக்குத் தெரிய வருகின்றது.

இந்நபர் ஆரம்ப காலத்தில் தனது வாழ்வாதாரத்திற்காக எமது கட்சியின் உதவிகளைப் பெற்று வந்தவர். தீவுப் பகுதியிலுள்ள இதர மக்களைப் போல தனது தினசரி தேவைகள் நிமித்தம் இவர் எமது அலுவலகத்திற்கு வந்து போயிருப்பாரே ஒழிய எமக்கும் இவருக்கும் எந்தவித இதர தொடர்புகளும் இருந்ததில்லை. இந்த நிலையில் இந்நபர் எமது கட்சியின் உறுப்பினர் என சில ஊடகங்கள் கற்பிதம் செய்து செய்திகள் வெளியிடுவது அற்பத்தனமான அரசியல் நோக்கமுள்ளதாகும்.

இந்தச் சம்பவத்தையிட்டு செய்திகள் வெளியிட்ட சில ஊடகங்கள் இந்தச் சம்பவத்தில் பலியான பாலகி எனது உறவினர் என்பதையோ அந்தப் பாலகியின் தொட்டப்பர் நான் என்பதையோ அல்லது இந்தப் பாதகத்தைச் செய்த சந்தேகநபரைத் தேடிப் பிடித்து கைது செய்ய உதவியவர்களுள் எமது கட்சியினரும் இருந்தனர் என்பதையோ வெகு இலகுவாக மறைத்துள்ளன. இது இவர்களின் அரசியல் உள்நோக்கத்தை மேலும் அம்பலப்படுத்துகின்றது.

எமது மக்களின் சாவிலும் அழிவிலும் அரசியல் நடத்த முற்படுவதை இவ்வாறான ஊடகங்கள் இனியாவது கைவிட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

# ‘வெள்ளைப் பூக்கள்’ குறும்படம் வெளியீடு




(வேலணை)

சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆதரவுடன் நெடுந்தீவு முகிலனின் எண்ணக்கருவில் உருவாக்கப்பட்ட ‘வெள்ளைப்பூக்கள்’ என்னும் குறும்படம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மேற்படி விழாவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் திருமதி கீதாஞ்சலி நகுலேஸ்வரன், யாழ், கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா மற்றும் ந.தமிழ் அழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.(05)

# யாழ். நகரில் திரைப்பட விழா




(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நாளையும் நாளை மறுதினமும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை ‘எம்.ஆர்.ரி.சி திரைப்பட விழா 01’ நடைபெறவுள்ளது.

இதில் பல்வேறு நாடுகளில் தயாரிக்கப்பட்ட சர்வதேச ரீதியாக சிறந்த ஆவணப்பட விருதுகளைப் பெற்ற எட்டு ஆவணப் படங்கள் திரையிடப்படவுள்ளன.

Bowling for columbine, Organs for sale, Super size me, Roger and me, The man who lied the world into war, Taxi to the dark side, Inside job, Capitalism, The cove ஆகிய ஆவணப் படங்கள் திரையிடப்படவுள்ளன.

இந்நிகழ்வில் திரையிடப்படும் ஆவணப்படங்களுக்கான அறிமுகவுரைகளும் வழங்கப்படவுள்ளன.

அறிமுகவுரைகளை கிருத்திகா தர்மரட்ணம், கு.பதிதரன், பேராசிரியர் வி.பி.சிவநாதன், ரா.கிருஸ்ணகுமார், கெ.குருநெற் (டென்மார்க்) பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், க.சட்டநாதன் போன்றோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஊடக மாணவர்களும் திரைப்பட ஆர்வலர்களும் பங்குபற்றலாம். இவ்வாறான திரைப்பட விழா மாதாந்தம் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.


## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் தம்பிஐயா செல்வரத்தினம்

(திதி: பிரதமை)

கடந்த 08.02.2012 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது இல்லத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் பங்கெடுத்து உதவியவர்கள் மற்றும் தொலைபேசி, கடிதம் மூலம் அனுதாபம் மற்றும் ஆறுதல் கூறித் தேற்றியவர்கள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று 09.03.2012 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதன் பின் நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

இல:15, குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(C/1319)

இங்ஙனம்
பிள்ளைகள்.


# சர்வதேச மகளிர் தினம் யாழ். நகரில் அனுஷ்டிப்பு




(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் யாழ். நகரின் பல்வேறு பகுதிகளிலும் சிறப்பான நிகழ்வுகளுடன் நேற்று ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெற்றுள்ளது.

மகளிர் தினத்தையொட்டிய குறும்பட வெளியீடு, கண்காட்சி, மேடை நிகழ்வுகள் என பல்வேறுபட்ட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் யாழ். மெதடிஸ்த திருச்சபை வளாகத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கண்காட்சி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிற்பகல் வடமாகாண இலங்கை வங்கிப் பணியாளர்கள் இணைந்து யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் பிற்பகல் 3.00 மணிக்கு மகளிர் தின நிகழ்வுகள் நடத்தினர்.

இதில் இலங்கை வங்கியின் நடவடிக்கை முகாமையாளர் எஸ்.என்.மாணிக்கசிங்கி புதிய உயர்கலைக் கல்லூரியின் அருள்நங்கை, சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த திருமகள் சிவசங்கர், முகாமைத்துவப் பிரிவைச் சேர்ந்த சிவசங்கர் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர். மேலும் பெருமளவு இலங்கை வங்கிப் பணியாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (பா)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1285)


# கலந்துரையாடல்

(வேலணை)

மண்டைதீவுக் கிராமத்தில் நெல்சிப் திட்டத்தின் வீதி அபிவிருத்தி பற்றி ஆராய்தலுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2 மணியளவில் மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

வேலணை பிரதேச தவிசாளர் சி.சிவராசா தலைமையில் நடைபெறவிருக்கின்ற இந்த கலந்துரையாடலில் நெல்சிப் திட்டத்தில் உள்ள மாவட்ட பொறுப்பாளர் உட்பட பொதுமக்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (05)

ஆற்றலைப் பெறவேண்டுமானால், மனதில் எப்போதும் ஆற்றலைப் பற்றிய எண்ணமே இருக்கவேண்டும். எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும். ஆற்றல் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். - அரவிந்தர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## சாதியமாகும் தமிழ்த் தேசியம்!

தமிழ்த் தேசியத்தை அதிதீவிரமாக முன்னெடுப்பவர்கள் அதை ஒரு சாதியாகவே பார்க்கிறார்கள் என்றும், மற்றெல்லோரையும் தீண்டத் தகாதவர்களாகப் பிரசாரம் செய்து தள்ளி வைத்துவிட்டு, தம்மைச் சமூகத்தின் ஆதிக்கப் படியில் அமர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று நண்பர் சொன்னார். யோசித்துப் பார்க்கையில், நம் பிரச்சினையை மிக அழகாக அவர் விளக்கியிருப்பதாகவே பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் உள்ளூராட்சி சபைகளில் விவாதிக்கப்பட்ட விடயங்களாக வெளியே வரும் செய்திகளில் அபிவிருத்தி பற்றியோ மக்கள் நலத் திட்டங்கள் பற்றியோ எதையும் காணோம். ஆனால், கூட்டமைப்பின் சபை உறுப்பினர்கள் ஒருவர் சாதியை இழுத்து மற்றவர் திட்டிக் குழப்பங்கள் ஏற்படுத்தியதாகவே பல சண்டைகள் வீதிக்கு வருகின்றன.

சமீபத்தில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் சாதிரீதியாகத் துன்புறுத்தப்பட்ட உறுப்பினர், மக்களோடு சேர்ந்து வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியதில், கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் சென்று விலக்குப் பிடிக்கவேண்டி வந்ததாய் செய்தி வந்தது. அதற்கு முன்னதாக வடமராட்சிப் பகுதியில் கூட்டமைப்பு உறுப்பினர்களின் சாதிவெறியைக் கண்டித்து எங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்த செய்தி பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தது.

இந்த விலக்குதல் மற்றும் இழிவுபடுத்துதல் மனோபாவத்தையே அரசியல் ரீதியாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னை சமூகத்தின் ஆதிக்க சக்தியாக நிறுத்துவதற்காகப் பிரயோகித்து வருகிறது. கூட்டமைப்பிற்கு உள்ளேயும் தலைமையால் மற்ற சில இரண்டாம்நிலைத் தலைவர்கள் ஒதுக்கப்படுவதன் பின்னால் இந்தச் சாதி உளவியலே தாக்கம் செலுத்துவதாக மற்றொரு நண்பரும் பேசும்போது குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரை, அவர்களிடம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து தெளிவான முடிவுகள் எதுவும் இருப்பதை இதுவரை தெரியப்படுத்தியதில்லை. தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான அவர்களது அணுகுமுறை – செயல் திட்டம் என்னவென்பது பற்றியும் அவர்கள் விளக்கியதில்லை.

வடக்கு கிழக்கு இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரம் என்ற அரூப அம்புகளை எறிந்துவிட்டு, தமிழ் மக்களுக்கான தங்கள் அலுவல் முடிந்ததென்று பதுங்கிவிடுகிறார்கள். தீர்வுக்கான வழிமுறைகள் பற்றி அரசாங்கம் எதைச் சொன்னாலும் எதிர்ப் பறிக்கைகளை விட்டுவிட்டு, பந்து கேட்கும் பிள்ளையை ஏமாற்ற நிலாவைக் காட்டுவது போல தமிழ் மக்களுக்கு சர்வதேசத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

காணி, பொலிஸ் அதிகாரங்களின் உள்ளே எவையெவற்றைப் பிரிப்பதில் அரசாங்கம் சிக்கல் இருப்பதாகக் காண்கிறது? அந்தச் சிக்கல்களை நீக்கி அதிகாரங்களைப் பிரித்துக் கொள்வது எவ்வாறு? என்றெல்லாம் சாத்தியபூர்வமான திட்டங்களை முன்வைத்து இவர்கள் பேசியதாய் எந்தக் குறிப்புகளுமில்லை.

எந்தச் சிங்கள அரசாங்கத்திற்கும் எந்தச் சிங்களவருக்கும் தமிழ் மக்களுக்கான அரசியலுரிமை எதையும் தர விருப்பமில்லை. சர்வதேசமாய்ப் பார்த்துத்தான் எதையாவது செய்ய வேணும் என்ற விடை வராச் சூத்திரத்திலேயே சிக்கிச் சுழல்கிறார்கள். இதற்கென மக்களைக் குழுஉணர்வில் திரட்டிக் கொள்ளவே தமிழ்த் தேசியத்தையும் ஒரு சாதியமாக்கும் மனப்பான்மையோடு உருவேற்றுகிறார்கள்.

ஆனால், தமிழ்த்தரப்பு அரசுடன் பேசியே தீர்வைக் காணமுடியும் என்பதே யதார்த்தம். அதுவே சர்வதேசமும் சொல்லுவதாக இருக்கிறது. எங்களது தேவைகளின் நியாயங்களை விளக்கியும் அவர்களிடமுள்ள பயங்களைப் புரிந்துகொண்டும் அதிகாரப் பகிர்தலுக்ுச் சமரசப் புள்ளிகளைக் கண்டடைவதே சாத்தியபூர்வ பேச்சு முறையாகும்.

அவர்கள் எதையும் தரமாட்டார்கள் என்பதைச் சொல்ல நமக்கெதற்குத் தலைவர்கள்? - ஆசிரியர் -

# அவசர சிகிச்சை பெறுவதற்கு நோயாளர்கள் பெரும் அவதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் நோயாளர்கள் காவு வண்டிகள் பற்றாக்குறையாகக் காணப்படுவதால் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கவேண்டிய நோயாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் இரு நோயாளர் காவு வண்டிகள் பயன்பாட்டில் உள்ள நிலையில் அதிகரித்த நோயாளர்களின் எண்ணிக்கை காரணமாக மேலதிகமாக இரண்டு நோயாளர் காவு வண்டிகள் தேவையாகவுள்ளது.

முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் நோயாளர் காவு வண்டியொன்று உள்ள போதும பல கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்கான நோயாளர்களை அனுமதிக்க வேண்டியுள்ளது. .இவ் வேளையில் பிறிதொரு அவசர சிகிச்சைக்கான நோயாளர்களை அனுமதிப்பதாயின் இவ் வண்டியே மீளவும் முழங்காவில் சென்று வரவேண்டியுள்ளது.

இதனால் உடனடியாக அவசர நோயாளர்களை சிகிச்சைக்காக அனுமதிக்கமுடியாது மரணங்கள் சம்பவிக்கக்கூடிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்பட்டு வருகின்றது.

எனவே மேலதிகமாக ஒரு நோயாளர் காவு வண்டி தேவையாகவுள்ளதுடன், நீண்ட தொலைவில் உள்ள அக்கராயன் பிரதேச வைத்திய சாலைக்கும் மேலதிகமாக ஒரு நோயாளர் காவுவண்டி தேவையாகவுள்ளது. வட்டக்கச்சி, பூநகரி, வேரவில் பிரதேச வைத்தியசாலைகளில் நோயாளர் காவு வணடிகள் பயன்பாட்டில் இல்லாதுள்ளதுடன், உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலையின் பயன்பாட்டில் இருந்த நோயாளர் காவு வண்டி பழுதடைந்து பாரிய திருத்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

இவ்வாறே கண்டாவளை, வன்னேரிக்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்களுக்கு தலா ஒரு நோயாளர் காவு வண்டியும் தேவையாகவுள்ளது. இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில பயன்பாட்டில் இருநத 07 நோயாளர் காவு வண்டிகளில் ஒன்று பழுதடைந்த நிலையில் 06 நோயாளர்கள் காவு வண்டிகள் பயன்பாட்டில் உள்ளன.

இவற்றுடன் மேலதிகமாக 10 நோயாளர் காவு வண்டிகள் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சபைகளின் பயன்பாட்டிற்கென தேவையாகவுள்ளதாக வைத்தியசாலையின் உயர் மட்டத் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

எனவே இவ் வண்டிகள் வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெறும் பட்சத்தில் நிறைவான வைத்திய சேவையினை வழங்கக் கூடியதாக இருக்கும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (69)

# 450 குடும்பங்களுக்கு பயன்தரு மரங்கள்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியில் மீளக்குடியமர்ந்தோரில் தற்காலிகமாக வீடுகளைப் பெற்றுக்கொண்ட 450 குடும்பங்களுக்கு பயன்தரு மரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

டி.ஆர்.சி என்று அழைக்கப்படும் டெனிஸ் அகதிகளுக்கான அமைப்பு இந்தப் பயனாளிகளுக்கு 5 தென்னம் பிள்ளைகள் மற்றும் ஐந்து வாழைக் குட்டிகளை வழங்கியுள்ளது.

ஆயினும், பயன்தரும் மரங்களைப்பெற்றுக் கொண்ட பயனாளிகள் சிலர், இந்த மரங்களை நட்டுவளர்ப்பதற்கேற்ற காலம் இதுவல்ல என்றும், மழைக்கால ஆரம்பத்தில் இந்த மரங்களைத் தந்துதவியிருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்குமென்றும் மேட்டுக்காணிகளில் வாழ்பவர்கள் இந்த மரங்களை நட்டு வளர்ப்பதற்கு தண்ணீருக்கு மிகவும் சிரமப்பட வேண்டி இருப்பதையும் தங்கள் அபிப்பிராயமாகத் தெரிவித்துள்ளனர். (138)

# மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதம் கையளிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மத்தியஸ்தர்சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதம் கையளிப்பும் மற்றும் பதக்கம் அணிவிக்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் ந.திருலிங்கநாதன் தலைமையில் வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரம் நியமனக் கடிதத்தை வழங்கி பதக்கத்தையும் அணிவித்துக் கௌரவித்தார்.

வடமராட்சி கிழக்கு மத்தியஸ்தர் சபை தவிசாளர் திருமதி யோகநாயகி சந்திரகுமாரன் தலைமையில் 12 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் கிராம அலுவலர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,பொது அமைப்பு பிரதிநிதிகள், பொலிஸ், இராணுவ உத்தியோகத்தர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (70)

# பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் புனர்வாழ்வு நிலையத்திற்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் வவுனியா பூந்தோட்டம் மகளிர் பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு நிலையத்திற்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அந்த நாட்டில் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழ் பிரதிநிதிகள் சிலரும் இணைந்து கொண்டிருந்ததாக வவுனியா புனர்வாழ்வு இணைப்பதிகாரி கேணல் மஞ்சுல குணசிங்க தெரிவித்துள்ளார்.

அங்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் விடுதலைப் புலிகளின் இயக்க முன்னாள் பெண் உறுப்பினர்களின் நலன்புரி விடயங்கள் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து ஆராயவதே பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரின் நோக்க மாக அமைந்திருந்தது.

பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் விடுதலைப் புலிகளின் இயக்க முன்னாள் உறுப்பினர்களுக்கு 82 பேர் தொடர்ந்தும புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நூலக பாவனையை மேம்படுத்த பல்வேறு செயற்திட்டங்கள்

பொது நூலக வாசகர் மத்தியில் நூலக பாவனையை மேம்படுத்துவதற்காக வேலணை பிரதேச சபையினால் செயற்றிட்டங்கள் முன்னெடுககப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நூலகரும், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தரும் கூட்டாக பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களை சலுகை அடிப்படையில் நூலகத்தில் அங்கத்தவராக இணைத்து நூல்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மாணவர்கள் கேட்கும் பாடம் சம்பந்தமான நூல்கள், பொது அறிவுத்திறன் , கணினி நூல்கள் என்பன கொள்வனவு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொது மக்களுக்கும் நூலகம் பற்றிய அறிவூட்டல் கருத்தரங்குகள் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் உள்ளூர் எழுத்தாளர்களினது நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு அவர்களை (உள்ளூர் எழுத்தாளர்களை) ஊக்குவிக்கும் முகமாக பல செயற்றிட்டங்களை வேலணைப் பிரதேச நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# மாணவர்கள் வாசிப்பு பழக்கத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்

## பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்

(திருநெல்வேலி)

எம்மிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகிறது. வாசிப்பு மனிதனின் அறிவுப் பசியைப் போக்குகிறது. வாசிப்பினை ஒருவன் அதிகளவில் மேற்கொள்ளும்போது அவனது அறிவு மேலும் விருத்தியடைகிறது. எமது மாணவர்கள் வாசிப்பில் போதிய அக்கறை செலுத்துதல் அவசியம் எனத் தெரிவித்தார் பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்த்துறை இலக்கிய மன்றத்தின் ஆதரவில் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற சிற்பனை கீதா கணேஷ் எழுதிய எத்தனங்கள் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழைப் படிப்பதனால் தொழில் வாய்ப்புக்கள் இல்லை என்னும் எண்ணம் மாணவர்களிடையேயிருந்து அகற்றப்படல் வேண்டும்.


தமிழை நன்கு கற்றதால் தான் உலகின் பல பாகங்களுக்கும் நான் சென்று வந்திருக்கின்றேன். தமிழைப் படித்தறிந்து கொண்டால் உலகின் பல மொழிகளைப் படிப்பதற்கு மிக இலகுவாக இருக்கும்.

இளைஞர்களின் இலக்கு சரியான திசையில் செல்ல வேண்டும். எமது மக்கள் புத்தக வெளியீடுகளில் மட்டும் புத்தகங்களை வாங்கிக்கொள்கின்றார்கள். தாமாகவே விரும்பி நூல்களை வாங்கிப் படிப்பவர்கள் அரிதாகவே உள்ளனர்.

இருபத்தெட்டு ஆண்டுகளாக யப்பான் மொழியுடன் நான் பரிச்சயமாகவிருந்தேன்.

இந்நிகழ்வில் செல்வி. தட்சாயினி நூல் வெளியீட்டுரையையும், திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் நயப்புரையையும் வழங்கியதுடன் பேராசிரியர் எஸ்.விசாகரூபனும் உரையாற்றினரர். (137)

# சேவை நலன் பாராட்டு



(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் இவ் வைத்தியசாலையில கடந்த பல வருடங்களாக வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் திருமதி ஏகாம்பரமூர்த்தி பத்மலோஜினிக்கான சேவை நலன் பாராட்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வைத்தியசாலையின் தற்போதைய வைத்திய அதிகாரி வி.கே.நடராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஊழியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். (104)

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம்

பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் பிரதம அதிதியாகவும், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் செயலாளர் பொ.கமலநாதன், பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் கி.யோகேந்திரன் ஆகியோர் சிறப்பு அதிதியாகவும் கலந்து கெள்ளவுள்ளனர். (116)

◆◆◆

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவின் அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதிய 5 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டப கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் இதுவரை காலமும் நிதியத்தில் அங்கத்தவர்களாகச் சேராதவர்களும் இதன் பலாபலன்களைப் பெறாதவர்களும் பொதுச் சபைக் கூட்டத்தில் கா்லை 9 மணிக்கு முன் அடையாள அட்டை ஓய்வூதிய அட்டையுடன் சமுகம் தந்து அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளலாம் எனச் செயலர் எம்.எக்ஸ். சர்வனந்தன் தெரிவித்துள்ளார். (104)

# 'மகா கருணா' அமைப்பின் உதவியில் வவுனியாவில் தொழிற்பயிற்சி நிலையம்

(வவுனியா )

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும உள்நாட்டு, வெளிநாடுகள் மற்றும் அரச சார்ப்பற்ற நிறுவனங்களுக்கு விடுத்த கோரிக்கைகளுக்கு அமைய வவுனியா பிரதேசத்தில் ஒரு புதிய தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக இரண்டு மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்றை பெற்றுக்கொடுக்க சிங்கப்பூர் "மகா கருணா" அமைப்பு தீர்மானித்துள்ளது.

தற்போது சிங்கப்பு,ரில் வசிக்கும் கலாநிதி கரத்தடியன குணரத்தின தேரரின் தலைமைத்துவத்தைக் கொண்ட, "மகா கருணா" புத்த மத அமைப்பினால் இத் தொழில் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி நிலையம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் மேற்படி அமைச்சில் நடைபெற்றதுடன், இதில் கலாநிதி கரதட்டியன குணரத்தின தேரோவும் தொழில் பயிற்சி அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தம்மிக ஹேவாப்பதிரணவும் கையெழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

வவுனியாவிலுள்ள மூன்று முறிப்பு மதவுவைத்துப்புரம் கிராமத்தில் அமைந்துள்ள இக்கட்டடத்தை இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபைக்கு வழங்குவதன் நோக்கம் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழும் இளைஞர்களுக்கு தொழில் பயிற்சியினை வழங்கி அவர்களை தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதேயாகும் என வண. குணரத்தின தேரர் தெரிவித்தார்.

# வடமராட்சி கோட்ட மட்டத்தில் தமிழ்த்தின செயன்முறைப் போட்டி

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்தின் கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டியில் இசையும் அசைவும் - இசை தனிப்பிரிவு இசைக் குழு, நாட்டார் பாடல், தனி நடனம், குழு நடனம் ஆகியவற்றுக்கான போட்டிகள் நடைபெறவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை பருத்தித் துறை கோட்டமட்டப் போட்டிகள் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை மருதங்கேணி கோட்ட மட்ட போட்டிகள் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி கோட்டமட்ட போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

வாசிப்பு, கதைகூறல், பேசசு, இலக்கிய நாடகம், வில்லுப் பாட்டு, விவாதம், ஆகிய பருத்தித்துறை கோட்ட மட்டப் போட்டிகள் பருத்தித் துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலையிலும், கரவெட்டி கோட்டமட்ட போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் மருதங்கேணி கோட்டமட்ட போட்டிகள் எதிர்வரும் வியாழக் கிழமை தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையிலும் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விக் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (116)



(யாழ்ப்பாணம்)

காரைநகர் - வலந்தலை மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மண்டபங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆலய நிர்வாகத்தினர் ஈ.பி.டி.யின் காரைநகர் பிரதேச அமைப்பாளரும் காரைநகர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவருமான கண்ணனிடம் (ரஜனி) அடிக்கல்லை வழங்குவதை காணலாம்.

# மகளிர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு சொண்ட் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களது விபரம் வெளியிடப்பட்டுள்ளது. இப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களது விபரம் வருமாறு,

கட்டுரைப்போட்டி

பிரிவு-01

(பாடசாலை மாணவருக்கானது)

ச.சிவசுதன (வல்லை வீதி, சங்கானை) ஜிலுக்சனா - தட்சணாமூர்த்தி (இல. 20,1 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), ஸ்ரீ.ஜெயவைசாலினி (47/18,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)

கட்டுரைப் போட்டி

பிரிவு - 02 (திறந்த போட்டி)

சி.சுரேக்கா (புளியங்கண்டு வீதி, ஆனைக்கோட்டை) த. சுபாராகினி- (ஆனைக்கோட்டை) க.விமலாசினி (வெள்ளம் போக்கட்டி, கொடிகாமம்)

கவிதைப்பிரிவு -01

(பாடசாலை மாணவருக்கானது)

பி.வர்ணுஜா (இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயம்) யே.சிபோறினி (பண்டத்தரிப்பு ஜசிந்தா றே.க.த.க.பாட சாலை) சி கீர்த்தனா(யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

கவிதை, பிரிவு - 02 (திறந்த போட்டி)

கதிரவேலு-நல்லதம்ப (பாடசாலை வீதி, துணவி) உ.நிரோஜன் (பொற்பதி வீதி, கொக்குவில்), ஹி.சோபிகா (மூளாய் வீதி,வட்டுக்கோட்டை).

# உணவு விவசாய அமைப்பினால் முல்லைத்தீவு மக்களுக்கு உதவிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு உதவிகளைச் செய்து வருகின்றது.

அந்த வகையில் 2011 மற்றும் 2012 பெரும் போகத்திற்காக உணவு மற்றும் விவசாய அமைப்பு விதை நெல் விநியோகத் திட்டத்தை முன்னெடுத்தது. அந்தத் திட்டத்திற்கு மத்திய அவசரகால பதில் நடவடிக்கைகளுக்குமான நிதியமும் யு.எஸ்.எயிட் அமைப்பும் அனுசரணை வழங்கியிருந்தன.

திட்ட அமுலாக்கத்திற்கு வடமாகாணத்தின் விவசாயக் காணி கால்நடை நீர்ப்பாசன அமைச்சும் உதவி வழங்கியதுடன், உலக உணவு மற்றும் விவசாய அமைப்பினால் அணமையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு தற்காலிகக் கொட்டகைகளுக்கான படங்கு கத்தி, மண்வெட்டி, முட்கரண்டி முதலான விவசாயக் கருவிகளும் வழங்கப்பட்டன.

# அடையாள அட்டை விநியோகம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் கடந்த வருடம் 1279 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இதில் அடையாள அட்டைகளைத் தொலைத் தவர்களில் 210 பேருக்கு மீள் அடையாள அட் டைகளும், திருததத்திற்காக விண்ணப்பித்தவர்களில் 832 பேருக்கும், முதற் தடவையாக விண்ணப்பித்தவர்களில் 237 பேருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளத்தாக அவர் தெரிவித்தார். (104)

# திட்டங்களுள் உள்வாங்கும் போது அடிப்படைத் தகைமை அவசியம்





(கிளிநொச்சி)

வன்னியில் கடமையாற்றுகின்ற முன்பள்ளி ஆசிரியர்கள் சிறந்த ஆளுமையுள்ளவர்கள். ஏனைய பிரதேச ஆசிரியர்களை விட சிறந்த அனுபவம் ஆற்றல் ஆளுமை கொண்டவர்கள். இக் கருத்தினை துறைசார்ந்த அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி-கரைச்சி கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களை நேற்று முன்தினம் கிளி.கனகபுரம் மகா வித்தியாலயத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரி t pf; வடக்கு மாகாண சபையின் தற்துணிவான முன் மாதிரியான முயற்சியே முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பளத்திட்டம் இருப்பினும் வழங்கப்படுகின்ற சம்பளம் போதுமானது இல்லை. எனவேதான் முன்பள்ளிகளின் வளர்ச்சியில் அந்தந்த முன்பள்ளி சமூகங்கள் அதிக அக்கறை எடுக்க வேண்டும்.

எமது முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கும் திறமையும் ஆற்றலும் முழுப்பயனும் எமது சிறார்களையே சென்றடைகிறது. இருப்பினும் பெரும்பாலான முன்பள்ளி ஆசிரியர்கள் அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யாதவர்களாகவே உள்ளனர். இது மாகாண சபையின் சம்பள அளவுத் திட்டத்திற்குள் உள்வாங்குவதில் பிரச்சினைகளை ஏற்படுத்தும். எப்பொழுதும் அரசின் எந்தவொரு திட்டத்திற்குள் உள்வாங்கப்படுவதற்கு ஒரு அடிப்படைத் தகைமை தேவை. எனவே ஆசிரியர்களை அனைவரும் அந்த தகைமையைக் கொண்டவர்களாக இருத்தல் அவசியம் எனவும் தெரிவித் தார்.

இந்நிகழ்வில் வட மாகாண முன்பள்ளி உதவிக் கல்விப் பணிபபாளர் செல்வி ஜெயாதம்பையா, கிளி.வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் விந்தன் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

# பாடசாலை மாணவர்களுக்கு காலணிகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களில் மாணவர் தேசிய படையணி பயிற்சிக்கு தெரிவாகிய வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு யாழ்.மாநகர சபை உறுப்பினர் எஸ்.விஜயகாந்த் பயிற்சியில் ஈடுபடுவதற்குரிய காலணிகளை வழங்கியுள்ளார்.

இப் பாடசாலை அதிபர் மாநகரசபை உறுப்பினரிடம் மாணவர்களுக்கு காலணியை வாங்கித்தரும்படி விடுத்த கோரிக்கையை அடுத்தே மாநகரசபை உறுப்பினர் கடந்த செவ்வாய்க்கிழமை மாணவர்களுக்கு காலணிகளை வழங்கினார். இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் எஸ்.ஞானப்பிரகாசம், உப அதிபர் கிறிஸ்தோபர், பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# மண்டைதீவுக்கு மின்சாரம்; ஆரம்பக்கட்ட நடவடிக்கை

யாழ்.நகரில் இருந்து கடல் மார்க்கமாக(கேபிள்) மண்டைதீவுக் கிராமத்திற்கு மின்சாரத்தை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மண்டைதீவுக் கிராமத்திற்கு மின்சாரத்தினை வழங்குவதற்காக இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாண பிரதி மின்சார பொறியிலாளர் குழுவொன்று அண்மையில் மண்டைதீவு கிராமத்திற்கு சென்று மின் விநியோகத்தினை விநியோகிப்பதற்கான பலதரப்பட்ட தரவுகளை மேற்கொண்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த மின்சக்தி எரிபொருள் அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க மண்டைதீவுக் கிராமத்திற்கான மின்சார விநியோகத்தையும் உடன் மேற்கொள்ளுமாறு உத்தரவுகளை பிறப்பித்திருந்ததுடன் வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசாவும் யாழ்.கச்சேரியில் இடம் பெறறிருந்த யாழ்.மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்திலும் மண்டைதீவு கிராமத்திற்கு உடனடியாக மின்சாரத்தை வழங்கியுதவுமாறு கோரிக்கைகளை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## முரசின் இன்றைய பலன்

(09.03.2012 -வெள்ளிக்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 26 ஆம் திகதி. பிரதமை பிற்பகல் 2.13.வரை. நட்சத்திரம் உத்தரம் முன்னிரவு 7.01 வரை. சித்தாமிர்தம் இராகுகாலம் 10.53 - 12.23 வரை. சுபநேரம் 6.23 - 7.53 வரை. எமகண்டம் 3.23 - 4.53 வரை. குளிகைகாலம் 7.53 - 9.23 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தாராளம், பெரியோர் நட்பு, அரச உதவிகள், செலவுகள் அதிகரிப்பு, அலைச்சல். |
| ரிஷபம் | பெண்வழியால் இலாபம், பெரியோர் ஆசி, சுபகாரியங்கள், திருப்தியற்ற இடமாற்றம். |
| மிதுனம் | மனத்தயக்கம், அலைச்சல், வைத்தியச்செலவு, பொன்பொருள்சேரும், உறவில் திருப்தி. |
| கடகம் | பெரும் கீர்த்தி, முன்எச்சரிக்கை, சகோதரரால் இடைஞ்சல், கௌரவப்பதவி. |
| சிம்மம் | மனக்குழப்பம், அரச உதவிகள், புத்திரபாக்கியம், உறவுகள் பலம் அடையும். |
| கன்னி | விருத்தி, கடன் தொல்லைகள், வேலைப்பளு அதிகரிப்பு, உறவினரால் உதவிகள். |
| துலாம் | ஓய்வும் உல்லாசமும், திடீர் இலாபம், மத்திம வாழ்க்கை, தொழிலில் அதிர்ஷ்டம். |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, திருமணத்தடை விலகும், அவசரம் கூடாது, பயணம் தவிர்த்தல்நன்று. |
| தனுசு | அதிகாரி உதவி, உடல் நலத்தில் கவனம், எதிர்பாராத செலவுகள், நினைத்தது நடக்கும். |
| மகரம் | அலைச்சல், அயலவர் அரவணைப்பு, அதிகாரிகளிடம் கவனம், வெளிநாட்டு வாய்ப்பு. |
| கும்பம் | பயணம் தவிர்க்கவும், வைத்தியச்செலவுகள், பதவி உயர்வு, பாகப்பிரிவினை. |
| மீனம் | ஸ்திரிகளால் நன்மை, வெளியூர்ப்பயணம், சுபச்செலவுகள், கடன்தொல்லை தீரும். |

# செஞ்சிலுவைச்சங்க கோப்பாய் பிரிவினால் பாடசாலை மாணவர்களுக்கு உபகரணம்

(வடமராட்சி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவினால் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்களுக்கென போக்குவரத்து கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டிய ஒரு தொகுதி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரி ஆரம்பிக்கும் போதும், விடும்வேளையும் மாணவர்களின் போக்குவரத்து நடவடிக்கையை இலகுபடுத்தும் முகமாக இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் கே.வி. இராஜசேகரம் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற இந் நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை உபதலைவர் டாக்டர் வை.தியாகரர்ஜா, கோப்பாய் பிரிவுத்தலைவர் இ.மயில்வாகனம் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர்.

கொழும்பிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த போக்குவரத்து ஒழுங்குக்கான உபகரணங்கள் முதன் முதலாக இப்பாடசாலைக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் இரண்டு பாடசாலைகளுக்கு இவ் உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் செஞ்சிலுவைச் சங்க தலைவர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த போக்குவரத்து பொலிஸ் அதிகாரி அஜித், கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர கலந்து கொண்டனர். (116)

# சிலாவத்தை பொதுச்சந்தையை புனரமைக்குமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-சிலாவத்தை பொதுச்சந்தை கட்டடப்பகுதிகள் சில உடைந்த நிலையிலும் சில பகுதிகளிற்கு கூரைகள் இன்றியும் காணப்படுவதால் இச்சந்தையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வோரும் நுகர்வோரும் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இச்சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் இவ்வருடம் அடங்கலாக வரிப்பணம் அறவிடப்பட்டுவரும் நிலையில், சந்தை புனரமைப்பதற்கான நடிவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவேண்டும் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

உடைந்த கட்டடங்களில் கூரைகள் இன்றிய நிலையில் மழை காலங்கள் வெள்ளநீர் தேங்கி நிற்பதாகவும் அதற்கு மேல் விரிப்பொன்றை பயன்படுத்தியே கஷ்டத்தின் மத்தியில் வியாபாரம் செய்வதாக வியாபாரிகளும், இவ்வாறான சூழலில் தாம் சிரமத்துடன் பொருட்களை கொள்வனவு செய்வதாக நுகர்வோரும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இச்சந்தைக்கென கழிப்பிடவசதிகளும் இல்லாத நிலை காணப்படுகிறது. எனவே இச்சந்தையின் குறைகளை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகளும் நுகர்வோரும் கோரிக்கை விடுக்கின்றனர். (141)

# அபராதம்

(திருநெல்வேலி)

அனுமதியின்றி மாடு ஒன்றையும், 25 கிலோமாட்டிறைச்சியையும் முச்சக்கர வண்டியொன்றில் கொண்டு சென்ற நாவாந்துறையை சேர்ந்த இருவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கடந்த மாதம் 16ஆம் திகதி யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் இருவரையும் இரண்டு வாரங்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

கடந்த திங்கட்கிழமை இவ் வழக்கு விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்ட போது இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவர்களுக்கு தலா பதினையாயிரம் ரூபா அபராதம் விதித்து யாழ். நீதவான் மா. கணேசராஜா தீர்ப்பளித்தார். (137)



திருநெல்வேலி கிழக்கு பூதவராயர் வீதியில் கொட்டப்பட்டுக்கிடக்கும் குப்பைக்கழிவுகளால் அவ்வீதியால் பயணம் செய்வோர பெரும் அசௌகரியஙகளுக்குள்ளாகின்றனர். இக் குப்பைகளை கால்நடைகள் கிளறி அசுத்தப் படுத்துவதனால துர்நாற்றம் வீசுவதாகவும் இது குறித்து நடவடிக்கை எடுப்பது யார்? எனவும் பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (137)



ஆரம்ப நிகழ்வின்போது...

# வடக்கின் பெரும் போர்

## சென் ஜோன்ஸ் சிறப்பான ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை வரலாற்றில் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் சென் ஜோன்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான 106ஆவது வடக்கின் பெரும் போர் மூன்று நாள் இனிங்ஸ் போட்டி நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக யாழ். மத்திய கல்லூரி அணி சிறப்பானதொரு ஆரம்பத்தைப் பெற்றது. இருப்பினும் அணி 39 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கபிலன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து மத்திய கல்லூரி அணியின் விக்கெட்டுக்கள் விரைவாக வீழ ஆரம்பித்தது. ஒரு கட்டத்தில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்று யாழ். மத்திய கல்லூரி அணி நெருக்கடியான நிலையை அடைந்தது. இந்த நிலையில் ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த அணித் தலைவர் கோகுலன் மற்றும் டார்வின் அணியின் நிலையை உணர்ந்து ஆடினர். இவர்கள் இருவரும் ஏழாவது விக்கெட்டுக்காக 36 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரி அணியின் விக்கெட்டுக்கள் வேகமாக வீழ்த்தப்பட்டது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் கோகுலன் 35, டார்வின் 22, கபிலன் 18, சிறிவண்ணன், வதூசனன் ஆகியோர் தலா 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விந்தாரங்கன் 17 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் அமிர்தயன், கவாஸ்கர், கபிலன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

தொடர்ந்து முதல் இனிங்ஸிற்காகக் களமிறங்கிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் இருந்தது. ஒரு ஓட்டத்தைப் பெற்ற நிலையில் முதலாவது இலக்கை சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இழந்தது. இருப்பினும் முதலாவது விக்கெட்டுக்காக இணைந்த ராஜித்தன், துவாரகசீலன் ஆகியோர் சிறப்பான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தி யாழ். மத்திய கல்லூரி அணியின் பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தினர். இந்த ஜோடி 60 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ராஜிந்தன் ஆட்டமிழந்தார். இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ராஜிந்தன் 32 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்காது துவாரகசீலன் 33 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். பந்து வீச்சில் வதூசனன் 32 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

இதேவேளை, போட்டியின் ஆரம்ப நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார். மற்றும் இரு கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், கல்விச் சமூக அதிகாரிகள், ஆதரவாளர்கள், ரசிகர்கள் என பலர் கலந்துகொண்டனர். (42, 20)

## ஆதிக்கம் செலுத்த முயற்சிப்போம்



(யாழ்ப்பாணம்)

எமது அணியின் சிறப்பான பந்து வீச்சால் எதிரணியை நாம் நினைத்தவாறு கட்டுப்படுத்தியிருக்கின்றோம். எனவே, துடுப்பாட்டத்தில் அதிக ஓட்டங்களைப் பெற்று போட்டியில் ஆதிக்கம் செலுத்த முயற்சிப்போம் என சென் ஜோன்ஸ் கல்லூரியின் அணித் தலைவர் ஜெ. அட்றியன் தெரிவித்தார்.

106ஆவது வடக்கின் பெரும் போர் மூன்று நாள் இனிங்ஸ் போட்டியின் முதல் நாள் ஆட்டம் குறித்து எமது செய்தியாளர் எஸ். தவநேசனிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் நினைத்தவாறு எதிரணியை முதல் இனிங்ஸில் குறிப்பிட்ட ஓட்ட எண்ணிக்கைக்குள் கட்டுப்படுத்தியிருக்கின்றோம். இதற்கு விந்தரகனின் பந்துவீச்சும் துணை புரிந்தது. எதிரணி துடுப்பாட்ட வீரர்கள் களத்தில் நிலைத்து நிற்காதவாறு பந்து வீச்சாளர்களின் செயற்பாடு அமைந்திருந்தது. இதேபோன்று துடுப்பாட்டத்தில் அதிக ஓட்டங்களைப் பெற முயற்சிப்போம். நடுவரிசை வீரர்கள் பலர் நெருக்கடியான நேரங்களில் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அதிக ஓட்ட எண்ணிக்கையை கடந்த பல போட்டிகளில் வெளிப்படுத்தியிருந்தனர். அதேபோன்று இந்தப் போட்டியில் அவர்கள் ஆடுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. அவ்வாறு அதிக ஓட்ட எண்ணிக்கையைப் பெற்று போட்டியில் முழு ஆதிக்கம் செலுத்த முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (42)

## ஆட்டத்தின் போக்கை மாற்றுவோம்



(யாழ்ப்பாணம்)

எதிர்பாராத விதமாக நாம் முதல் இனிங்ஸில் குறித்த இலக்கை எட்டவில்லை. இருப்பினும் எமது அணியில் போட்டியில் திருப்பு முனையை ஏற்படுத்தக்கூடிய பந்து வீச்சாளர்கள் உள்ளமையால் எதிரணியை குறைந்த ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி ஆட்டத்தின் போக்கை எமது கைக்குள் எடுத்துக்கொள்ள முயற்சிப்போம் என யாழ். மத்திய கல்லூரி அணித் தலைவர் த. கோகுலன் தெரிவித்தார்.

106ஆவது வடக்கின் பெரும் போர் மூன்று நாள் இனிங்ஸ் போட்டியின் முதல் நாள் ஆட்டம் குறித்து எமது செய்தியாளர் எஸ். தவநேசனிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முதல் இனிங்ஸில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறந்த அடித்தளத்தை இட்டுத் தந்தபோதும் அதனை நாம் சரிவரப் பயன்படுத்தவில்லை. இதன் பின்னர் ஏதிர்பாராத விதமாக வீரர்கள் ஆட்டமிழப்பு அமைந்துவிட்டது. அதன் மூலம் சிறந்த இணைப்பாட்டம் ஒன்றும் முதல் இனிங்ஸில் எமக்கு அமையவில்லை. இருப்பினும் அணியில் திறமை வாய்ந்த பந்து வீச்சாளர்கள் பலர் உள்ளனர். அவர்கள் எதிரணித் துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவார்கள் என நம்புகின்றேன். அதன் மூலம் எதிரணியை குறுகிய ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்த முயற்சிப்போம். அத்துடன் இரண்டாவது இனிங்ஸில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி அதிக ஓட்டங்களைப் பெற்று போட்டியின் போக்கை மாற்றும் வகையில் ஆட முயற்சிப்போம் எனவும் அவர் தெரிவித்தார். (42)



## சி.பி. கிண்ணம் அவுஸி. வசம்

அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற சி.பி. கிண்ண முக்கோண கிரிக்கெட் தொடரில் அவுஸ்ரேலிய அணி சம்பியனாகியுள்ளது. நேற்று நடைபெற்ற 3ஆவது இறுதிப்போட்டியில் இலங்கை அணியை 16 ஓட்டங்களால் வெற்றிகொண்டு அவுஸ்ரேலியா அணி சம்பியனானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் அவுஸ்ரேலியாவை துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதற்கிணங்க 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 231 ஓட்டங்களை அவுஸ்ரேலியா பெற்றிருந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 215 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

9.5 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவர் உட்பட 28 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் கிளின்ட் மக்கே போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். தொடர் நாயகனாக இலங்கை அணியின் தில்ஷான் தெரிவு செய்யப்பட்டார்.

# தெல்லிப்பளை கோட்ட வலைப்பந்து; யூனியனை வீழ்த்தியது வசாவிளான்



(அளவெட்டி)

தெல்லிப்பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவின் பரபரப்பான ஆட்டமொன்றில் யூனியன் கல்லூரியை வீழ்த்தி வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் சம்பியனானது.

கடந்த செவ்வாய்க்கிழமை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் ஆட்டம் தொடங்கிய வேளையிலிருந்து முதற்பாதி ஆட்டம் நிறுத்தப்படும் வரை யூனியன் கல்லூரியே ஆதிககம் செலுத்தியது.

முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தவேளை 5:1 என்ற நிலையில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி முன்னிலை வகித்தது. எனினும் மறுபாதி ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை வீறு கொண்டெழுந்த வசாவிளான் மத்திய மகாவித்தியாலய வீரர்களின் தாக்குதலில் நிலை குலைந்தனர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வீரர்கள். சிறப்பான முறையில் ஆடி தமது திறமையை வெளிக்காட்டி வசாவிளான் மகாவித்தியாலயம் ஆட்டநேர இறுதியில் 8:7 என்ற புள்ளிகளின் அடிப் படையில் யூனியன் கல்லூரியை வீழ்த்தி கோட்ட மட்ட சம்பியனானது. (93)

# வடமராட்சி வலய மட்ட வலைப்பந்து முடிவுகள்

(அளவெட்டி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற பாடசாலைகள் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

முதலாமிடம் - மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் - வட இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - வல்வை மகளிர் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

முதலாமிடம் - வடஇந்து மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - மெதடிஸ் உயர்தரப் பாடசாலை, மூன்றாமிடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

முதலாமிடம் - மெதடிஸ்த உயர்தரப்பாடசாலை, இரண்டாமிடம் - வடஇந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம். (93)

# மஞ்சி கரப்பந்தாட்டம் யாழ்.அணிகளும் பங்கேற்பு

(அளவெட்டி)

மஞ்சி மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளைய தினம் மன்னார் பொது விளையாட்டரங்கு மைதானத்தில் நடைபெறவுள்ளது. காலை 8.30 மணிமுதல் நடைபெறும் இந்தப்போட்டியில் யாழ். மாவட்டத்திலிருந்து பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை மற்றும் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகங்களும், ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர், காங்கேசன்துறை இராணுவம், உடுப்பிட்டி ரஜிவன் விளையாட்டுக்கழகங்கள் பங்கபற்றவுள்ளன.

(93)

# வடமாகாண மரதன் ஓட்டம்; இலட்சக்கணக்கில் பரிசில்கள்

## பதிவுகளை இன்று மேற்கொள்ள அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்க்ளின் போட்டியாளர்கள் பங்குபற்றும் 17 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி நாளை காலை 6.30 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கு பற்றும் 30 கிலோமீற்றர் தூரம் கொண்ட மரதன் ஓட்டப் போட்டியில் முதலாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பரிசு வழங்கப்படவிருப்பதுடன், முதல் 10 இடங்களைப் பெறுவோறுக்கு மேலும் பெறுமதியான பணப்பரிசும் தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெறும் வாய்ப்பும் கிடைக்கவுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளவர்கள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாதாக துரையாப்பா விளையாட்டரங்கில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியில், முதலாம் இடம்பெறுவோருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கபபடும். அதே வேளை இரண்டாமிடம் 50 ஆயிரம் ரூபா, மூன்றாமிடம் 25ஆயிரம், நான்காமிடம் 20 ஆயிரம், ஐந்தாமிடம் 15ஆயிரம், ஆறாமிடம் 12ஆயிரத்து 500 ரூபா, ஏழாமிடம் 10ஆயிரம், எட்டாமிடம் 7ஆயிரத்து 500ரூபா, ஒன்பதாமிடம் 5ஆயிரம், பத்தாமிடம் இரண்டாயிரத்து 500 ரூபா என்ற அடிப்படையில் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சபையின் விளையாட்டுத்துறை பணிப்பாளர் அண்ணாத்துரை அறிவித்துள்ளார்.

# சாவகச்சேரி இந்து, சாந்தி அணிகள் உதைபந்தாட்டத்தில் சம்பியன்

(மட்டுவில்)

சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்து, ஆண்கள் பிரிவில் நாவற்குழி சாந்தி விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்று சம்பியனாகின.

பெண்களுக்கான போட்டியில் சாவகச்சேரி இந்து விளையாட்டுக் கழகம் வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோதியது. பரபரப்பான இந்தப் போட்டியில் ஆட்டம முடிவடையும் வரை இரு அணிகளும் கோல் எதனையும் போடாததை அடுத்து, வெற்றி தண்ட உதை முறையில் தீர்மானிக்கப்பட்டது. இதில் சாவகச்சேரி இந்து விளையாட்டுக்கழகம் 1 : 0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான போட்டியில் அன்னை விளையாட்டுக் கழகமும், நாவற்குழி சாந்தி விளையாட்டுக்கழகமும் மோதின.

இதில் அன்னை விளையாட்டுக்கழகம் 3:1 என்றகோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

(118)

# உடுவில் பிரதேச மட்ட எல்லே போட்டி முடிவுகள்

(அளவெட்டி)

உடுவில் பிரதேச எல்லே போட்டிகள் கடந்த புதன்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்கள்பிரிவில் ஏழாலை சிறிமுருகன் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்தது.

பெண்கள் பிரிவில் சுன்னாகம் வளர்பிறை விளையாட்டுக் கழகம், ஏழாலை சிறிமுருகன் விளையாட்டுக்கழகத்தை 2:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி கண்டது. (93)

# இன்று செய்தியாளர் மாநாடு; ஓய்வை அறிவிப்பாரா ராவிட்?



(பெங்களூர்)

இந்தியக் கிரிக்கெட் அணியின் தூண் என்றும், சுவர் என்றும் வர்ணிக்கப்பட்டு வந்த ராகுல் ராவிட், டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதை பெங்களூரில் அறிவிக்க உள்ளார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பெங்களூரில் இன்று செய்தியாளர்கள் சந்திப்பிற்கு ராகுல் ராவிட் அழைப்பு விடுத்துள்ளார். இந்தச் சந்திப்பில் பி.சி.சி.ஐ தலைவர் என். ஸ்ரீனிவாசனும் கலந்துகொள்ள உள்ளார். ஒரு வேளை தனது ஓய்வு அறிவிப்பினை இன்று ராகுல் ரராவிட் தெரிவிப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே ஒரு நாள் மற்றும் 20 20 போட்டிகளில் இருந்து விலகி விட்ட ராவிட், கடைசியாக அவுஸ்ரேலியாவிற்கு எதிராக நடந்த டெஸ்ட் போட்டியிலும் சிறப்பாக விளையாடாததால் இந்த முடிவை எடுத்திருப்பார் என்று தெரிகிறது.

டெஸ்ட் போட்டிகளில் ராவிட் இதுவரை 13,288 ரன்கள் எடுத்து அதிக ரன் எடுத்த இந்திய வீரர்களின் பட்டியலில் சச்சினுக்கு அடுத்த படியாக இரண்டாவது இடத்தில் உள்ளார். மேலும், டெஸ்ட் போட்டிகளில் 210 பிடிகளைப் பிடித்து இதுவரை எந்த வீரரும் சாதிக்காத சாதனையைச் செய்துள்ளார்.

# டெஸ்ட்போட்டியை கடினமாக இந்திய வீரர்கள் நினைக்கின்றனர்

## விமர்சிக்கிறார் சப்பல்



(சிட்னி)

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் கிரேக் சப்பல். இவர் 2005ஆம் ஆண்டு முதல் 2007 வரை இந்திய அணிக்கு பயிற்சியாளராகப் பணி புரிந்தார். இவர் பயிற்சியாளராக இருந்த காலத்தில் அதிகமான சர்ச்சையே ஏற்பட்டது. பெரும்பாலான இந்திய வீரர்களுக்கும், அவருக்கும் சுமுகமான உறவு இருந்ததில்லை.

இதனால் கிரேக்சப்பல் பற்றி தற்போதும் வீரர்கள் விமர்சிக்கிறார்கள். இந்த நிலையில் இந்திய வீரர்களை பற்றி கிரேக் சப்பல் மிகவும் மோசமாக விமர்சித்து உள்ளார். தனது புத்தக வெளியீட்டு விழாவில் அவர் கூறியதாவது; இந்திய வீரர்களுக்கு டெஸ்ட் போட்டியில் உண்மையிலேயே ஆர்வம் இல்லை. இது அவுஸ்ரேலிய பயணத்தில் நன்றாகத் தெரிந்தது. டெஸ்ட் போட்டியை மிகவும் கடினமாக நினைக்கிறார்கள். 20 ஓவர் போட்டியில் அதிகமான பணம் சம்பாதிப்பதையே விரும்புகின்றனர். இந்திய கலாச்சாரம் வித்தியாசமானது. இவர்களிடம் அணியாக செயற்படும் கலாச்சாரம் இல்லை. தலைமைப் பதவிக்கு என பிரத்யேக பயிற்சி எதுவும் அளிக்கப்படவில்லை. இதனால் தலைமை பண்பில் சிறந்தவர்கள் இல்லை என அவர் கூறியுள்ளார்.

# பரிந்துரைகளை செயற்படுத்த ஆலோசனைகள் அவசியமில்லை



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவது சம்பந்த மாக எந்தத் தரப்பின் ஆலோசனைகளும் அவசியமில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.


ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் பணிகளை அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்வேறு தரப்பினர் விடுக்கும் கோரிக்கைகளை நிராகரிப்பதாகவும் இலங்கைக்கு எதிராக மேற் கொள்ளப்படும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தேவையான பின்னணி ஏற்கனவே உருவாக்கப்பட்டுளள தாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மேற்குலக நாடுகள் மீண்டும் இலங்கையை காலனித்துவ நாடாக மாற்ற முயற்சித்து வருகின்றன. சிறிய நாடுகளை தமது கைப்பாவைகளாக மாற்ற மேற்குலகம் எடுத்து வரும் முயற்சிகளை தோற்கடிக்க பிராந்திய ரீதியில் ஏனைய நாடுகள் கைகோர்க்க வேண்டும் எனவும் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

# கிராமப்புற மின் விநியோகம் ; ஈரானின் உதவிகள் தொடரும்

(கொழும்பு)



இலங்கைக்கு தொடர்ச்சியாக உதவிகள் வழங்கப்படும் என ஈரான் அறிவித்துள்ளது. நாட்டின் கிராமப் பகுதிகளுக்கு மின்சார விநியோகம் வழங்கும் திட்டங்களுக்கு உதவிகளை வழங்கவுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானியத் தூதுவர் டாக்டர் என்.எம். ஹஸ்னீ பூரிற்கும் மின்வலு மற்றும எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் ஈரான் தொடர்ச்சியாக அளித்துவரும் ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதன்போது தெரிவித்துள்ளார்.

ஆயிரம் மின்விநியோகத் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கப் படும் என ஈரான் உறுதியளித்துள்ளது.

# மகமோதரை வைத்தியசாலையில் சிசுமரணம் 17 ஆக அதிகரித்தது



(கொழும்பு)

காலி - மகமோதரை அரசாங்க வைத் தியசாலையில் பிறந்த குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை தற் போது 17 ஆக அதிக ரித்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் கடந்த ஜனவரி மாதம் முதல் இன்றை வரை பிறந்த குழந்தைகளில் 17 குழந்தைகள் இவ்வாறு உயிரிழந்துள்ளன . இருப்பினும் இந்த மரணங்களுக்குத் தொற்றுக் கிருமிகளின் தாக்கம் காரணம் அல்ல என மகமோதரை வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளரான டாக்டர் ருஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்த வைத்தியசாலையில் பிறந்த ஒரு சிசு பிறந்து பத்து நிமிடத்தில் இறந்தது. இதன் காரணமாக ஆத்திரமுற்ற குறித்த குழந்தையின் தந்தை வைத்தியசாலை சூழலில் அமைதியின்மையைத் தோற்றுவிக்க முயற்சித்தார் என்றும் இதனை யடுதது வைத்தியசாலைககுப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பரிந்துரைகளை அமுல்படுத்தினால் தீர்க்கமான முடிவு எடுக்க நேரிடும்

## அரசிலுள்ள இரு கட்சிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்கினால் தீர்க்கமான முடிவுகளை எடுக்க நேரிடும் என்று ஜாதிக ஹெல உறுமயவும், அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியும் அரசாங்கத்தை எச்சரித்துள்ளன.

அத்துடன் நாட்டின் மூலச் சட்டத்தை மீறி அரசியலமைப்பிற்கு எதிராக செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தலைமையிலான குழுவினரின் பிரஜாவுரிமைகளை இரத்துச் செய்து கடும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அக்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகச் செயலாளரும் பேச்சாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவிக்கையில், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தலைமையிலான 31 பேர் கையெழுத்திட்டு ஜெனிவாவில் நடை பெறுகின்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இலங்கைக்கு எதிராக அழுத்தங்களை கொடுக் கவும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும் கோரியுள்ளனர். இக் கடிதத்தில் அரசாங்கத்திற்கு எதிராகவும் இராணுவத்திற்கு எதிராகவும் கடுமையான குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளன.

அதேபோன்று தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் 47 நாடுகளுக்கு கடிதம் அனுப்பி நாட்டிற்கு எதிராகச் செயற்பட வலியுறுத்தியுள்ளன. சம்பந்தன் குழுவினரை உடனடியாகக் கைது செய்து கடும் தண்டனை வழங்க வேண்டும். அத்துடன் அவர்களின் பிரஜாவுரிமைகளையும் பறிக்க வேண்டும்.

நல்லிணக்க ஆணைக குழுவின் பரிந்துரைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஜெனி வாவில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் உத்தரவாதமானது நாட்டிற்கு எதிரான செயலாகவே கருதுகின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழு அளவில் நடைமுறைப்படுத்தக்கூடாது.

இதனால் நாட்டில் பெரும் சிக்கல் நிலையே ஏற்படும் எனக் கூறினார்.

இது தொடர்பாக தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் முஸம்மில் கூறுகையில், நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை முழு அளவில் நடைமுறைப்படுத்த முடியாது. நியாயமான விடயங்கள் காணப்பட்டா லும் நாட்டிற்கு ஒவ்வாத பாரிய ஆபத் துக்கள் ஏற்படக் கூடிய விடயங்களே கூடுதலாக உள்ளன.

உதாரணமாக அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களை தேசிய சுதந்திர முன்னணி கடுமையாக எதிர்க்கிறது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக பல விடயங்கள் பேசப்பட வேணடும். ஆணைக்குழுவின் பரிந்துரைகளை

# இந்தியாவுடன் ராஜதந்திர விரிசல் ; சீர்செய்வதற்கு அரசு கடும் முயற்சி

## என்கிறது ஜே.வி.பி



(கொழும்பு)

ஜெனிவா சென்ற அரச இராஜதந்திரக் குழுவின் நடவடிக்கைகளினால் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் விரிசல் நிலை உருவாகியுள்ளது. இதனை சீர்செய்துகொள்ள அரசாங்கம் கடும் முயற்சிகளை மேற் கொண்டு வருவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அரசாங்கம் பாரியளவில் சர்வதேச நாடுகளின் அழுத் தங்களுக்குள் சிறைப்பட்டுள் ளது. மேலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உள்நாட்டில் முழு அளவில் நடைமுறைப்படுத் தும் நிலை ஏற்படும்போது பெரும் பிரச்சினைகள் தோன்றுவது மட்டுமன்றி பல சந்தர்ப்பங்களில் அரசாங்கமே விசாரணைகளுக் குட்படும் நிலையும் உருவாகும் என்றும் அந்தக்கட்சி எச்சரித்துள்ளது.

இது குறித்து தெளிவு படுத்திய ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா,

ஜெனிவாவில் நடைபெறுகின்ற ஐ.நா.மனித உரிமை பேரவையில் உரையாற்றிய அமைச்சர் மகிந்த, சமரசிங்க நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழு அளவில் நடைமுறைப்படுததுவதாக ஒப்புதல் அளித்தார்.

அது மட்டுமன்றி உரையின் பின்னர் ஜெனிவாவில் ஊடகவியலாளர்களை சந்தித்த அமைச்சர் மகிந்த சமரசிங்க இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு இந்தியா ஆதரவளிக்காது என்றும் குறிப் பிட்டுள்ளார்.

இதனால் இந்திய மத்தியரசு உள்நாட்டு அரசியலில் பல் வேறு சிக்கல்களை எதிர் கொள்வதுடன் தமிழகம், டில்லிக்கு எதிராக செயற்பட ஆரம் பித்தது.

இந்தியாவின் ஆதரவை இலங்கை ஜெனிவாவில் வெளிப்படுத்தியமையால் மத்தியரசு இலஙகையுடன் முறுகல் நிலையை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

இந்த விவகாரத்தில் சமரசம் செய்து கொள்ளும் முயற்சியில் அரசாங்கம் டில்லியுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றது என்றார்.

# சமூகத்தில் பெண்களின் முக்கியம் ஆசியாவில் இலங்கை முதலிடம்



(கொழும்பு)

சமூகத்தில் பெண்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத் திறகு அமைய ஆசியாவில் இலங்கைக்கு முதலிடம் கிடைத்துள் ளது. உலகப் பொருளாதார அமைப்பினால் 2011 ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்ட ஆண் - பெண் வேறுபாடு தொடர்பான அறிக்கையின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஹாவார்ட் மற்றும் கலி போர்னியா பல்கலைக் கழகங்கள் இணைந்து உலகிலுள்ள அனைத்து நாடுகளும் உள்ளடங்கும் வகையில் மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக குடும்பநல சுகாதார பணியகத்தின் விசேட வைத்திய நிபுணர் கபில ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

நான்கு பிரதான பிரிவுகளின் கீழ் பெண்களுக்கு சமூகத்தில் வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் தொடர்பில் கண்காணிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரம், அரசியல், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய நான்கு துறைகளின் கீழ் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள் ளது. இதன் பிரகாரம் இலங்கைக்கு 31 ஆவது இடம் கிடைத்துள்ளது.

அயல் நாடான இந்தியாவுக்கு 113 ஆவது இடமும், சீனாவுக்கு 61 ஆவது இடமும் கிடைத்துள்ளன. இந்த அறிக்கைக்கு அமைய ஐஸ் லாந்து முதலாவது இடத்திலும், நோர்வே இரண்டாவது இடத்திலும், பின்லாந்து மூன்றாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சன் சீ கப்பல் விவகாரம்; இலங்கையருக்கு பிடியாணை

(கொழும்பு)


கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் 492 இலங்கை அகதிகள் கனடா செல்வதற்கு எம்.வீ.சன் சீ கப்பலை ஒழுங்கு செய்த இலங்கையர் ஒருவருக்கு, கனடா நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

தயாகரன் மார்க்கண்டு என்ற இலங்கையருக்கு எதிராகவே இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்தக் கப்பல் கனடாவை சென்றடைந்தது.

இதற்கான ஏற்பாடுகளை கனடாவில் உள்ள தயாகரன் மார்க்கண்டு என்பவரே மேற் கொண்டதாகக் குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

எனினும் அவர் தற்போது கனடாவில் இருந்து வெளியேறி, வேறு நாடு ஒன்றில் வசிப்பதாக கனேடியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



அவர் கைது செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுவதுடன், ஒரு மில்லியன் கனேடிய டொலர்கள் தண்டப் பணம் வழங்கப் படலாம் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

04) மேலே சிட்டையில் ரவி வாங்கிய பொருட்களின் மொத்தப் பெறுமதி யாது?

..........................................................................................

05) ரவி வாங்கிய பொருள்களுக்காக வியாபாரியிடம் ரூபா 500 ஐக் கொடுத்தால் வியாபாரி கொடுத்திருக்க வேண்டிய மிகுதிப் பணம் எவ்வளவு?

..........................................................................................

**10) குறிப்பிட்ட ஆரம்பப் பாடசாலை ஒன்றில் தரம் 1 முதல் 5 வரையான வகுப்புக்கள் கற்கும் மாணவர்களின் விபரம் பின்வருமாறு,**

| வகுப்பு | மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|
| தரம் - 1 | 120 |
| தரம் - 2 | 133 |
| தரம் - 3 | 150 |
| தரம் - 4 | 140 |
| தரம் - 5 | 148 |

1) குறிப்பிட்ட பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

2) தரம் 4, தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

3) முதன்மை நிலை 1 இல் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

4) அதிகமாக மாணவர்கள் உள்ள வகுப்பைவிட தரம் 1 இல் எத்தனை மாணவர்கள் குறைவாக உள்ளனர்?

..........................................................................................

5) தரம் 5 மாணவர்கள் ஒருவருக்கு 6 கொப்பிகள் வீதம் கொடுப்பதற்கு எத்தனை கொப்பிகள் தேவை?

..........................................................................................

**11) பின்வருவனவற்றுக்குச் சரியான விடைகளை எழுதுக.**

1) 927 ரூபாவை மூன்று பேருக்குச் சமமாகப் பங்கிடும்போது ஒருவர் பெறும் பணத்தின் அளவு யாது?

..........................................................................................

2) கரன் 1 லீற்றர் 750 மில்லிலீற்றர் எண்ணெயையும், கரன் வாங்கியதன் இரு மடங்கு எண்ணெய்யைத் தீபனும் வாங்கினான். இருவரும் வாங்கிய எண்ணெயின் மொத்த அளவு யாது?

..........................................................................................

3) 50 பைக்கற்றுக்கள் கொண்ட பால்மாப் பெட்டி ஒன்றின் நிறை 12 kg 750 g ஆகும். 450 பைக்கற்றுக்கள் கொண்ட பால்மாப் பெட்டியின் நிறை யாது?

..........................................................................................

4) 200 g சீனியின் விலை ரூபா 14.00 எனின், ஒரு கிலோகிராம் சீனியின் விலை யாது?

..........................................................................................

5) நசீர் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 3 km ஆகும். ஒரு வாரத்தில் அவன் பாடசாலைக்குச் சென்றுவர பயணம் செய்த மொத்தத் தூரம் யாது?

..........................................................................................

## கடந்த புதன்கிழமை வெளியான வெளியீடு - 37 கேள்விகளின் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 2 | 09) 1 | 17) 2 | 25) 1 | 33) 1 |
| 02) 1 | 10) 3 | 18) 3 | 26) 3 | 34) 5 |
| 03) 3 | 11) 1 | 19) 2 | 27) 3 | 35) 2 |
| 04) 2 | 12) 2 | 20) 3 | 28) 3 | 36) 2 |
| 05) 1 | 13) 2 | 21) 2 | 29) 24 | 37) ஒட்டகம் |
| 06) 2 | 14) 2 | 22) 2 | 30) 2 | 38) 2 |
| 07) 1 | 15) 3 | 23) 2 | 31) SINK | 39) 3 |
| 08) 3 | 16) 2 | 24) 3 | 32) 1679 | 40) 3 |



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு

வெளியீடு 38



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**01) தரப்பட்ட பாடலை வாசித்த பின்னர் 1 - 12 வரையான வினாக்களுக்கு விடைதருக.**

காடும் வயலும் இந்நாளில்
கண்ட படிக்கு அழிவதுடன்
கூடும் குப்பை கூளங்களால்
குடிநீர் கெட்டும் வருகிறதாம்!

நல்ல காற்றை நமக்காக
நாளும் தருகிற மரங்கள்
இல்லை யென்று ஆவதனால்
எங்கும் பசுமை அழிகிறதாம்!

கோடிக் கணக்கில் சாலைகளில்
குதித்துப் பாயும் ஊர்திகளால்
ஓடிப் பரவும் நற்காற்று
உலகில் மாறி வருகிறதாம்!

சுற்றுச் சூழல் எப்பொழுதும்
தூய்மை யாக ஆனால் தான்
குற்றம் குறைகள் இல்லாமல்
கூடி வாழ வழி செய்யும்!

01) "பசுமை" என்பதன் ஒத்த கருத்துள்ள சொல் தருக.

..........................................................................................

02) "வயல்" என்பதன் ஒத்த கருத்துள்ள சொல் தருக.

..........................................................................................

03) "இல்லை" என்பதன் எதிர்க்கருத்துச் சொல் தருக.

..........................................................................................

04) "கூடும்" என்பதன் எதிர்க்கருத்துச் சொல் தருக.

..........................................................................................

05) நல்ல காற்றை எது தருகிறது?

..........................................................................................

06) ஊர்திகள் என்பதன் கருத்து யாது?

..........................................................................................

07) குப்பை கூழங்களால் எது கெட்டு வருகிறது?

..........................................................................................

08) இப்பாடல் எதனை வலியுறுத்திக் கூறுகின்றது?

..........................................................................................

09) தன்மை, பன்மைச் சொல் ஒன்று தருக.

..........................................................................................

10) சுற்றுக் சூழலை நாம் எவ்வாறு வைக்க வேண்டும்?

..........................................................................................

11) பாடலில் ஒத்தகருத்து இணைமொழி ஒன்று பன்மையில் உள்ளது. அதனை ஒருமையில் எழுதுக.

..........................................................................................

12) காடுகள் அழிக்கப்படுவதால் தூய காற்றுத் தடைப்படுவது மட்டுமல்லாது வேறு என்ன பாதிப்பு ஏற்படுகிறது?

..........................................................................................

**02) ஒழுங்கின்றி இருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

01) தொடங்காதே / அறியமுன் / செய்யத் / ஒன்றின் / அதனைச் / இயல்பை

..........................................................................................

02) நெற்றி / நிலத்திலே / உழைத்தான் / தொழிலாளி / சிந்த / வியர்வை

..........................................................................................

**03) கீழ்வரும் மரபுத் தொடர்களின் உட்கருத்தை எழுதுக.**

01) தட்டிக்கொடுத்தல் .................................. 02) கண்திறத்தல்..................................

**04) பின்வரும் வசனங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

01) Please open your book.................................. 02) what do you like lunch..................................

03) May I go out?.................................. 04) I am drinking water..................................

**05) பின்வரும் சிங்கள வசனங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

01)
அய்யா..................................
ஒயாகே..................................
கெதர..................................
கொகேத?..................................



02)
நங்கி..................................
மகே..................................
கொழும்ப..................................
தியனவா..................................



**06) மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**





01) வேப்பம் பூ அதிகமாக உள்ள மாதம்,
1) சித்திரை 2) மார்கழி 3) ஆவணி 4) ஆடி


02) ஆண்டில் ஒரு தடவைக்கு மேல் பூத்துக் காய்க்கும் மரம் யாது?
1) மரமுந்திரிகை 2) வேம்பு 3) கறிமுருங்கை 4) இலுப்பை

03) மின்னேரியாக் கடவுள் என வர்ணிக்கப்படும் நீர்ப்பாசனத்தை அபிவிருத்தி செய்தவர்,
1) மகாபராக்கிரமபாகு 2) தாதுசேனன் 3) மகாசேனன் 4) வசபமன்னன்

04) 
படத்தில் எலுமிச்சம் பழப்பாதி காட்டப்பட்டுள்ளது. இதை அணுகும் பூச்சி,
1) கொசு 2) எறும்பு 3) நுளம்பு 4) கரப்பான்

05) இரு உலர் மின்கலங்கள் (C) ஒரு மின்குமிழ் (B) மூன்று வயர்த் தண்டுகள் ஆகியன கீழே உள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ளவாறு தொடுக்கப்பட்டுள்ளன. எந்த உருவில் உள்ள மின்குமிழ் ஒளிரும்?



1)

2)

3)

4)

06) 
இவ்வுருவுடன் அதிகம் தொடர்புள்ள சொல்?
1) வேடர் 2) விவசாயி 3) சாரதி 4) தச்சுத்தொழிலாளி

07) இரவில் நடமாடும் மிருகம்,
1) பசு 2) பூனை 3) ஆடு 4) நாய்

08) பயிரிடும் சாடியின் உள்ளே கீழ் உள்ள துவாரத்தின் மேல் முதலில் ஒரு படையை நிரப்புவதற்குப் பொருத்தமான ஊடகம்,
1) மண்கலவை 2) உக்கிய இலைகள் 3) செங்கல் துண்கள் 4) உக்கிய சாணம்



09) 
1) முன்னால் புகையிரதக் கடவை
2) முன்னால் பாதுகாப்பான புகையிரதக் கடவை
3) முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை
4) முன்னால் புகையிரதத் தரிப்பிடம்

10) தூரியம் பூக்களை அதிகம் நாடிவரும் பிராணி,
1) வெளவால் 2) அணில் 3) வீட்டு ஈ 4) குளவி

11) காந்தத்தினால் கவரப்படும் பொருள்?
1) செப்பு நாணயம் 2) கண்ணாடி 3) குண்டூசி 4) பிளாஸ்ரிக்

12) பின்வரும் பூக்களில் எத்தாவரத்தின் பூ மிகப் பெரியது?
1) தொட்டாச்சிணுங்கி 2) அகத்தி 3) மல்லிகை 4) வெண்டி





13) கண்கள், காதுகள் ஊடாகத் தகவல்களைப் பெறும் ஊடகங்களில் ஒன்று எது?
1) பத்திரிகை 2) வானொலி 3) தொலைபேசி 4) தொலைக்காட்சி

14) பின்வரும் பொருட்களை நீரில் இட்டு சிறிது நேரத்தில் அவதானிக்கும் பொழுது அமிழக்கூடியது எது?
1) பஞ்சு 2) றெஜிபோம் 3) ஐஸ்கட்டி 4) தேங்காய்யெண்ணெய்

15) நீரில் தனது வாழ்க்கை வட்டத்தை ஆரம்பிக்கும் உயிரினங்கள்?
1) நத்தை, தவளை 2) தவளை, பாம்பு 3) ஆமை, முதலை 4) தும்பி, மண்புழு

**07) பின்வரும் பறவைகளின் பெயர்களைத் தெரிந்து எழுதுக.**





செண்பகம், புளுணி, குயில், தையல்சிட்டு, குக்குறுவான், ஆட்காட்டி, நாகணவாய், கௌதாரி

1) 
2) 
3) 
4) 

.............................. .............................. .............................. ..............................

**08) பின்வரும் தாவரங்களின் பெயர்களைத் தெரிந்து எழுதுக.**

குப்பைமேனி, நாயுருவி, அறுகம்புல், எருக்கு, அகத்தி, ஆமணக்கு, பொன்னாங்காணி

1) 
2) 
3) 
4) 

.............................. .............................. .............................. ..............................

**09) ரவி கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கியபோது வழங்கப்பட்ட சிட்டையானது தரப்படுகின்றது. இதனைப் பயன்படுத்திக் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.**

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| அரிசி | 1கிலோகிராம் | 37.00 |
| மாம்பழம் | 7 | 84.00 |
| வெங்காயம் | 500 கிராம் | 17.50 |
| கீரை | 4 கட்டு | 28.00 |
| தேங்காய் எண்ணெய் | $1\frac{1}{2}$ லீற்றர் | 96.00 |

1) இதற்கமைய 1 கிலோகிராம் வெங்காயத்தின் விலை யாது?

2) 750 மில்லி லீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை யாது?

3) தேங்காய் எண்ணெய் 1 லீற்றரும், 5 மாம்பழங்களும், 3 கட்டுக் கீரையும் வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?



# கூட்டமைப்பு கனடா கிளையின் குமுறல்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கனடா கிளையின் தலைவர் எனச் சொல்லிக் கொள்ளும் வே. தங்கவேலு என்பவர், சம்பந்தனுக்கு எதிராகக் கருத்து வெளியிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரனைக் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதற்குப் பதிலளித்திருக்கும் கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரான சுரேஷ், கனடாவில் கூட்டமைப்பிற்குக் கிளையே கிடையாது என்று குறிப்பிட்டுள்ளதோடு, ஒரே தலைவர் மீது கண் மூடித்தனமாக நம்பிக்கை வைக்காதீர்கள் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

கூட்டமைப்பு கனடா கிளையின் தலைவராகச் சொல்லிக்கொள்பவரது கண்டன அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கும் முக்கிய விஷயங்கள் வருமாறு:

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின உருவப் பொம்மையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற அமைப்பு பல்கலைக்கழகக் கட்டடத்தில் தொங்க விட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. தமிழினத் துரோகி சுமந்திரன் என எழுதிய சுலோக அட்டையும் கழுத்தில் தொங்க விடப்பட்டுள்ளது. சுலோக அட்டையில் போர்க் குற்ற விசாரணை எங்கே? எனக் கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளதாம்.

இந்தச் செய்தியினை TamilNet இணையத்தளமும் வெளியிட்டு தனது வழக்கமான அழுக்காற்றையும் வெளிக் காட்டியுள்ளது. இதில் இருந்து இந்தக் கீழ்த்தரமான பரப்புரைக்குப் பின்னால் யார் யார் இருக்கிறார்கள் என்பதை ஊகித்துக் கொள ளலாம்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஒன்றியம் எனப் பல ஒன்றியங்கள் இயங்குகின்றன. இதில் எந்த ஒனறியம் இப்படியான கீழ்த்தரமான செயலுக்குப் பொறுப்பு என்பது தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் ழகர, ளகர வேற்றுமை தெரியாதவர்கள் இதை எழுதியுள்ளார்கள்.

உண்மையில் இந்தப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்துக்கு துணிவு இருந்திருந்தால் ஜெனிவாவுக்குப் போயிருக்கும் டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவியை யாழ்ப்பாண பல்கலைக் கழகக் கட்டடத்தில் தொங்கவிட்டிருக்க வேண்டும்!

த.தே.கூ. எடுத்த முடிவுக்கு சுமந்திரன் ஆதரவு தெரிவித்துள்ளார். ஆனால் அவர் மட்டும் அதற்குப் பொறுப்பல்ல. ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் (சுரேஷ் பிரேமச்சந்திரன் நீங்கலாக) அந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள். குறிப்பாக த.தே.கூ இன் பொதுச் செயலாளர் மாவை சேனாதி ராசா, கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பகிரங்கமாக ஆதரவு தெரிவித்துள்ளார்கள். அப்படியிருக்க சுமந்திரன் மீது மட்டும் சேறுவாரிப் பூசுவது ஏன்? அதன் உள்நோக்கம் என்ன?

சுமந்திரன் ஒரு மூத்த வழக்கறிஞர். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து 105 பக்கங்களைக் கொண்ட திறனாய்வை மூன்று மொழிகளிலும் தயாரித்து வெளியிட உதவினார். அரசு தமிழ்ப் பகுதிகளில் மேற்கொண்ட தனியார் காணிப் பதிவுச் சட்டத்துக்கு முரணானது என்று நீதிமன்றம் சென்று வழக்காடி வெற்றிபெற்றார். கடந்த நான்கு மாதங்களில் இரண்டுமுறை அமெரிக்கா வந்து இராஜாங்கத் திணைக்களத்தோடு பேச்சுவார்த்தை நடத்தியி ருக்கிறார்.

இது போன்ற அவரது கட்சிப் பணிதான் எதிரிகளுக்கு அவர் மீது காழ்ப்புணர்வை உருவாக்கியுள்ளது. அவர் பத்தோடு பதினொன்றாக இருந்திருந்தால அவர் மீது சேறு பூச யாரும் முன்வந்திருக்க மாட்டார்கள். படித்தவர்களைப் பிடிக்காத ஒரு கலாசாரம் எம்மிடையே இருக்கிறது.

இன்றைய உலக ஒழுங்கில் – புவிசார் அரசியலில் - அனைத்துலக சமூகத்தை வெட்டியோட முடியாது. ஒட்டித்தான் ஓடவேண்டும்.

அனைத்துலகம் என்பது முக்கியமாக அமெரிக்கா மற்றும் இந்திய நாடுகளாகும். இந்த நாடுகளின் உதவி இல்லாமல், ஒத்தாசை இல்லாமல் எமது உரிமைகளைப் பெறலாம் என நினைப்பவர்கள் அந்த உத்தி அல் லது உத்திகள் எவை என்று தயவுசெய்து சொல்ல வேண்டும்.



நாம் முன்வைக்கும் கோரிககைகள் நியாயமாகவும் நீதியாகவும் நடைமுறைச் சாத்தியமானதாகவும் இருப்பதாக பன்னாட்டு சமூகம கருத வேண்டும். இப்போதைக்குச் சாத்தியம் இல்லாத வற்றைக் கேட்டுப் பயனில்லை.


முடிவாக, த.தே.கூ. இன் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி த.தே.கூ. இன் முடிவு சம்பந் தனும் சுமந்திரனும் எடுத்த முடிவு என கனடிய தமிழ் வானொலியில் சொல்லிய கருத்தினை வன்மையாகக் கண்டிக்கிறோம். எடுத்தேன்; கவிழ்த்தேன் என கருத்துக் கூறுவது அவர் போன்ற ஒரு மூத்த அரசியல்வாதிக்கு அழகல்ல. அது மகிந்த இராசபக்சேயின பொறிக்குள் விழுவது போல் ஆகிவிடும். அதற்கு அவர் பலியாகக் கூடாது என்றும் கூட்டமைப்பு கனடா கிளையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# கே.பாலசந்தர் சொல்கிறார்

எனக்கு ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு சிகிச்சை முடித்து வந்த பிறகு நான் எடுத்த முடிவுகளில் ஒன்று புதுமுகங்களை அறிமுகப்படுத்துவது... "அவள் ஒரு தொடர்கதை" படத்துக்கு நடிகர்களை தேர்வு செய்த போது ஒரு படத்தில் தலை காட்டியிருந்தாலும் அவர்க,ளைத் தவிர்த்துவிட வேண்டும் என்பதில் குறியாக இருந்தேன். அந்தப் படத்தில் ஒரே ஒரு விதிவிலக்கு கமல்ஹாசன். அந்த விகடகவி வேடத்துக்கு எனக்குச் சரியான ஆள் கிடைக்கவில்லை. அந்த வேடத்தை கமலைத தவிர வேறு யார் செய்திருந்தாலும் சரியாக இருக்காது என்றும் தோன்றியது. யாரை நம்பி அந்த வேடத்தை நான ஒப்படைக்க முடியும்? அதனால் அவரை மட்டும் வைத்துக் கொண்டு மற்ற எல்லாரையும் புதுமுகங்களாக தேர்வு செய்தேன்.

ஆரம்பித்திலிருந்தே எனக்கு சௌகர்யமான நடிகர்களை வைத்து படம் எடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தேன். போகப் போக அதைத் தளர்த்திக் கொள்ள வேண்டியிருந்தது வேறு விஷயம்.

சொல்லப் போனால் அது ஸ்ரீதர் பாணி. அவர் நிறைய புதுமுகங்களை அறிமுகப்படுத்திக் கொண்டே இருப்பார். அதைத் தொடர்ந்து நானும் புதுமுகங்களைத தேட ஆரம்பித்து, பாலசந்தர் படம என்றால் புதுமுகங்கள் இருப்பார்கள் என்று பேசும் அளவுககுப் போனது.



பாலசந்தர் படம் என்று மக்கள் மனதில் ஒரு எதிர்பார்ப்புக்கும் அதுவே காரணமானது.

புது முகங்கள் என்றபோது அவர்களுக்குச் சொல்லித்தர மிகவும அவகாசம் இருந்தது. முழுமையாகத் தயார் செய்ய முடிந்தது. நூறு சதவீதம் அவர்களைத் தயார் செய்தேன். வெற்றியும் நூற்றுக்கு நூறாக அமைந்தது.

என்னோடு தோழமையோடு இருக்கிற கமல்ஹாசன், ரஜினிகாந்தை வைத்துக்கூட ஒரு கட்டத்துக்கு மேல் நான படம் இயக்கவில்லை. ரஜினியைக்கூட எஸ்.பி.முத்துராமனையும் கே.எஸ். ரவிகுமாரையும் வைத்துத்தான் இயக்க வைத்தேன்.

ரஜினியிடம் என்ன எதிர்பார்ப்பார்கள் என்று எனக்குத தெரியும். அதை முத்துராமன் செய்வதுதான் சரியாக இருக்கும். என்னிடம் மக்கள் எதிர்பார்ப்பது வேறு. நானும் ரஜினியும் சேர்ந்தால் அந்த எதிர்பார்ப்பு வேறு மாதிரி ஆகிவிடும். அது படத்தைப் பாதிக்கும் என்பதை உணர்ந்து கொண்டேன்.

இமேஜ் இருக்கும் நடிகர்களை வைத்துப் படம் எடுக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்துவிட்டேன்.

ஆனால், கமல் எனக்கு பிரச்சினை இல்லை. "தப்புத் தாளங்கள்" படத்தில் பார்த்தீர்கள் என்றால் ஒரே ஒரு காட்சியில் அவர் தாசி வீட்டுக்கு வந்துவிட்டுப் போவது போல ஒரு காட்சி. கமல் அதை மகிழ்ச்சியாக நடித்துக் கொடுத்தார். அந்த மாதிரி ஒரு காட்சியை ரஜினியை வைத்துப் பண்ண முடியாது. மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.



ஆக்ஷன் ஹீரோவாகவே நடித்துக் கொண்டிருந்த ரஜினியை வைத்து "தில்லு முல்லு" என்ற காமெடி படத்தை எடுத்தேன்.

அதற்கப்புறம் தான் அவர் படங்களில் முன்பகுதியில் காமெடியாகவும் பின் பாதியில் சீரியஸாகவும் இருப்பது மாதிரி ஒரு ட்ரெண்ட் உருவானது. அண்ணாமலை, முத்து எல்லாம் அந்த டைப் படங்கள்தான். காமெடியில் அவரை ரசிக்கிறார்கள் என்பது தெரிந்ததும் அது ஒரு போர்முலாவாகவே மாறிவிட்டது.

# இலவசங்களை வாங்கி உங்களை விற்கிறீர்கள்!

இணையத்தில் உலவுகிறீர்களா? அப்படியெனில் உங்களது பெயர், வயது, பாலினம், வேலை செய்யும் இடம், பிடித்தது, பிடிக்காதது போன்ற சுய விபரங்கள் அடங்கிய அடையாள அட்டையை கழுத்தில் மாட்டிக்கொண்டு சுற்றி வருகிறீர்கள் என்றுதான் பொருள். இணையத்தை போகிற போக்கில் மேயும், அதிலேயே பல மணிநேரங்களைச் செலவிடும், அங்கேயே குடியிருக்கும் 90 சதவிகிதத்துக்கும் மேற்பட்டோருக்கு இதுதான் கதி.

இணையத்தில் யாரும் மறைந்து வாழ முடியாது. எதையாவது செய்துவிட்டு, அது யாருக்கும் தெரியப்போவதில்லை என்று நினைப்பது மாபெரும் அறியாமை. அனைவரும் கண்காணிக்கப்படுகிறார்கள். ஒவ்வோர அசைவும் பதிவு செய்யப்படுகிறது. இப்படி நம்மைக் கண்காணிப்பவர்களுக்கு என்ன நன்மை கிடைக்கப் போகிறது, நம்மைப் பின்தொடர்ந்து நாட்டின் இராணுவ இரகசியங்களையா தெரிந்து கொள்ளப் போகிறார்கள் என்று நினைக்கிறீர்களா, அப்படியானால், நீங்கள்தான் அப்பாவி நம்பர் 1. பணம் கொடுக்காமல் கிடைக்கிறது என்பதற்காக எதையாவது பயன்படுத்தினால், அங்கு விற்கப்படும் பொருளே நீங்களாகத்தான் இருப்பீர்கள் என்பது பொருளாதார நிபுணர் ஒருவர் கூறியிருக்கும் அருமையான வாசகம்.

வாடிப்பட்டி என்று டைப் செய்தவுடனேயே, அந்த ஊர், எந்த நாட்டில், எந்த மாநிலத்தில் இருக்கிறது, நீங்கள இப்போது இருக்கும் இடத்திலிருந்து அந்த ஊருக்கு எவ்வளவு தொலைவு, எந்தப் பாதையில் செல்ல வேண்டும், அந்த ஊரின் தலைவர் யார், மக்கள் தொகை எவ்வளவு என்பன உள்ளிட்ட எல்லாத் தகவல்களையும் விரல் சொடுக்கும் நேரத்தில் பெற்றுவிட முடிகிறது.

அந்த ஊரில் குறிப்பிட்ட ஒரு நபரின் வீடு எந்த இடத்தில் இருக்கிறது என்பதைக்கூட கண்டுபிடித்துவிட முடியும். இதற்கெல்லாம் எப்போதாவது பணம் கொடுத்திருக்கிறீர்களா? இதையெல்லாம் இவர்கள் நமக்கு ஏன் இலவசமாக சேவை செய்ய வேண்டும் என்கிற கேள்வி எப்போதாவது உதித்திருக்கிறதா? இல்லையென்றால், நீங்கள் நம்பியிருக்கும் நிறுவனங்கள் இதுவரை உங்களைத்தான் விற்று வந்திருக்கின்றன.

இலவசமாகச் சேவையளிக்கும் ஃபேஸ்புக் நிறுவனத்தின் இப்போதைய மதிப்பு ரூபா 5 இலட்சம் கோடி. கடந்த நிதியாண்டின் வருவாய் மட்டும் 20 ஆயிரம் கோடியைத் தாண்டியிருக்கிறது.

இலவசமாகச் சேவையளிக்கும் ஃபேஸ்புக்காரர்கள், எப்படி இவ்வளவு பணத்தைச் சம்பாதித்தார்கள்? மறைக்காமல் கூறுவதென்றால், நம்மை விற்றுத்தான். அதுசரி, நம்மை ஒரு பொருளாக விற்க முடியுமா என்ன? நிச்சயமாக முடியும்.

பணம் கொடுப்பவர்கள் மட்டும் தான் வாடிக்கையாளர். சும்மா வந்து போகிறவர்களெல்லாம் வாடிக்கையாளர் அல்லர். பணம் தருவோரிடம்



வேறு என்னென்ன பொருள்களையெல்லாம் விற்றுப் பணம் பெற முடியும் என்று நிறுவனங்கள் யோசிபபது வழக்கம். பணம் தராமல் இலவச சேவைகளை மட்டுமே பயன்படுத்துபவரை என்ன செய்வது? அவர்களையே விற்றுவிட வேண்டியதுதான்.

அந்த வகையில், தங்களது சேவைகளைப் பயன்படுத்தும் அனைவரின் தகவல்களையும் கூகுள், பேஸ்புக், டுவிட்டர் போன்ற நிறுவனங்கள் தங்களது தரவுத் தளத்தில் சேகரித்து வைக்கின்றன.

தகவல்கள் என்றால், அவர் அடிக்கடி என்னென்ன இணையதளங்களைப் பார்வையிடுகிறார், எந்த மாதிரியான தகவல்களை அனுப்புகிறார், எந்த நேரத்தில் இணையத்தைப பயன்படுத்துகிறார் என்பதெல்லாம் தான். இவைதான் விளம்பர நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன.

விளம்பரதாரர்கள் மற்றும் அவர்களுக்கான ஏஜென்சிகளைப் பொருத்தவரை இது மிகவும் மதிப்புமிக்க பொருள். அதனால், எத்தகைய பயனராக இருந்தாலும் அவரது சுயவிபரங்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட விலை உண்டு.

Google Docs எனப்படும் ஆவணங்களைச் சேமித்து வைக்கப் படும் இடம், நாட்காட்டி, மின்னஞ்சல் என அனைத்தும் ஒருங்கிணைக்கப் பட்டிருப்பதால், பயனரின் அனைத்துத் தகவல்களையும் கூகுள் மிக எளிதாகச சேமித்து வைத்துவிடுகிறது. கூகுள் Dashboard என்கிற பகுதியில் நாம் இதுவரை இணையத்தில் என்னவெல்லாம் செய்திருக்கிறோம் என்று பார்க்க முடியும். இதை அழிக்க முடியும் என்றாலும், அது எத்தனை பேருக்குத் தெரியும்?

கடைசியாக ஒன்று, எனது பேஸ்புக சுவரில் யாரோ தேவையற்ற ஆபாசத் தகவல்களைப் பதிவிடுகிறார்கள் என்று இணையத்தில் உலவும் பலர் கதறுவதைக் "கேட்டி ருப்போம். அந்த "யாரோ" உருவாக வாய்ப்பளித்தது வேறு யாருமல்ல, சம்பந்தப்பட்ட அப்பாவியேதான்.

- புளியங்குடி பூலியன்

# ஈரான் மீது தாக்குதல் நடந்தால் பிராந்திய சீர்குலைவு ஏற்படும்

## இந்தியத் தூதுவர் எச்சரிக்கை

(வொஷிங்டன்,)

ஈரான் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அது பிராந்தியச் சீர்குலைவுக்கு வழிவகுக்கும் என்று இந்தியா கருத்து தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் வீரேந்திர போல், இந்தியாவின் சார்பில் மேற்கண்ட கருத்தை செவ்வாய்க் கிழமை தெரிவித்தார்.

இது குறித்து வீரேந்திர போல் மேலும் கூறியதாவது:

இந்திய வெளியுறவுக் கொள்கையின் நோக்கம், இந்தியாவின் எரிபொருள் தேவை ஆகியவற்றை உருக்குலைக்கும் விதமாக அமெரிக்கப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டு வருகின்றன. மேலும் இந்தியாவின் செயற்பாடுகள் குறித்து தவறான புரிதல்களும் உருவாக்கப்படுகின்றன.

இந்திய மக்களின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. அப்படி இருந்தும் இந்தியாவில் இன்னமும் 40 கோடி மக்கள் வர்த்தக ரீதியான எரிபொருள் பயன்பாட்டை மேற்கொள்வதில்லை. மாறாக ஈரானிடமிருந்து இந்தியா இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெயின் அளவு மாதந்தோறும் அதிகரித்து வருவதாகவும், அது குறித்த புள்ளிவிவரங்களும் வெளியிடப்படுகின்றன. இச்செயல் இந்தியா குறித்து தவறாகச் சித்தரிக்கப்படுவதாகும்.

இந்தியாவின் ஒட்டுமொத்த எரிபொருள் இறக்குமதி அளவை ஒப்பிடும்போது, ஈரானிடமிருந்து கொள்முதல் செய்யும் கச்சா எண்ணெயின் இறக்குமதி அளவு குறைவாகவே உள்ளது.

இந்திய மக்களின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளதால், உடனடியாக ஒரு மாற்று ஏற்பாட்டை உருவாக்குவதோ, ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்துவதோ இயலாது.

சர்வதேச சமுதாயத்தில் பொறுப்புமிக்க நாடு என்ற வகையில் இந்தியா தனது கடமையை சிறப்பாகவே செய்யும். ஈரான் விவகாரத்தில் மோதல் போக்கு உருவாவது தவிர்க்கப்பட வேண்டும் என்றார்.

## துவக்காலச் சிந்தனை



### மனம் மாறி நற்பிரஜையாவோம்

நாம் இந்த உலகில் வாழும் நாட்கள் வெறும் சொற்ப காலங்களே. சராசரியாக 60 வருடங்களே எங்களின் ஆயுட்காலத்தை வரையறுக்கலாம்.

இந்த நாட்களில் நாம் எவ்வளவு கொடூரமான செயல்களைச் செய்கின்றோம். அதிலிருந்து தப்பிப் பிழைத்து மீண்டும் அதே வழியில் செல்கின்றோம். இது எமது அன்றாட பழக்கமாகிவிட்டது. கடவுள் இந்த உலகில் நாம் வாழக் கொடுத்த காலப்பகுதியை பொற்காலமாக நினைத்து வாழ நம்மில் யாராவது முயற்சி செய்திருக்கின்றோமா? செய்யத் தகாத அனைத்தையும் செய்துவிட்டு பழியை மற்றவர்கள் மேல் போட்டு விட்டு நல்லவர்களாக மாறுகின்றோம். இந்த மனிதப் பிறவி ஒருமுறை மட்டும் தான் வருகிறது. நாங்கள் மீண்டும் ஒருதடவை பிறக்கபோகின்றோம் என்று யாராவது நினைத்து அவ்வெண்ணத்திலா நாம் வாழ்கின்றோம். அது நிச்சியம் இல்லை. நாம் இறந்த பின்பு எமக்கு இருப்பது .இறைவனின் சந்நிதானத்தை அலங்கரிக்கும் பொறுப்பே. அதற்கும் நாம் தகுதியுள்ளவர்களாக இருந்தால் மட்டுமே அதையும் எம்மால் செய்யமுடியும். இல்லையேல் அலகையின் உலகில் தளப்படுவோம்.

ஆண்டவர் மேல் நம்பிக்கை வைத்து நாம் வாழுகின்ற எஞ்சிய காலப்பகுதியையாவது பரிசுத்தமாக்கி, எமது குடும்பம், உறவுகள், பிள்ளைகள், மனைவி, சுற்றத்தார் என்று சந்தோசமாக வாழ இந்தக் காலத்தைப் பயன்படுத்தி மனம்மாறி புதுவாழ்க்கை வாழுவோம்.

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்

# இந்திய எல்லைப் பகுதி பாதுகாப்பு; நவீனரக விமானங்கள் கொள்வனவு



(புதுடில்லி)

நாட்டின் எல்லைப்பாதுகாப்பு படையை தரம் உயர்த்துவதற்கு ரூபா 11 கோடி செலவில் நவீன ரக போர் விமானங்கள் மற்றும் ஹெலி கொப்டர்களை வாங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.


இந்தியா-சீனா மற்றும் இந்தியா -பாகிஸ்தான் ஆகிய எல்லைப் பகுதிகளில் அவ்வப்போது ஊடுருவல்களும் அத்துமீறல்களும் ஏற்படுகின்றன.

இந்த எல்லைகளைப் பாதுகாப்பதில் சாலை வழிகளை விட ஆகாயம் வழியாக கண்காணிப்பதில் போர்விமானங்கள், ஹெலிகொபடர்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கிவிட்டன.

தற்போது 5 தருவ் ரக ஹெலி கொப்டர்கள், ஒரு எம்பரர் ரகம், இரண்டு அவ்ரோ ரக விமானங்கள், 6 மி-17 ரக ஹெலிகொப்டர்கள் ஆகியவற்றினை இந்திய விமானப்படை மூலமாக எல்லைப் பாதுகாப்பு படை பராமரித்தும், எல்லையை கண்காணித்தும் வருகின்றன. இவற்றிற்கு கூடுதலாக மி.17 வி-5 ஹெலிகொப்டரையும் பராமரித்து வருகிறது.

எல்லைப் பாதுகாப்பு படையில் ரஷ்ய நிறுவனத்தின் ஹெலி கொப்டர்கள் கடந்த 1980இல் இருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை அடிக்கடி தொழில்நுட்ப கோளாறு ஏற்படுகிறது. எனவே நவீன ஹெலி கொப்டர்கள், ரஷ்ய தொழில்நுட பத்துடன் இந்துஸ்தான் ஏரோனாட்டிகல்ஸ் நிறுவனத்துடன் இணைந்து நவீன தொழில்நுட்பத்துடன் தரம் உயர்த்தப்படவுள்ளது.

# 59ஆவது தேசிய திரைப்பட விருது; சிறந்த நடிகையாக வித்தியாபாலன்



(புதுடில்லி)

59ஆவது தேசிய திரைப்பட விருதுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன. இதில் "தி டேட்டி பிக்சர்" படத்தில் நடித்த வித்யா பாலன் சிறந்த நடிகையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மராத்தி மொழிப் படமான "தியூல்" படத்தில் நடித்த கிரீஷ் குல்கர்னி சிறந்த நடிகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தமிழ் படங்களுக்கு 5 தேசிய விருதுகள் கிடைத்துள்ளன. சற்குணம் இயக்கிய "வாகை சூடவா" சிறந்த தமிழ் பட விருதைப் பெற்றுள்ளது. சிறந்த பொழுதுபோக்குப் படத்துக்கான விருது சுசீந்திரன் இயக்கிய "அழகர்சாமியின் குதிரை" படத்துக்கு கிடைத்துள்ளது. அப்படத்தில் நடித்த அப்புகுட்டி சிறந்த துணை நடிகராகத் தேர்வாகியுள்ளார்.

ஆரண்ய காண்டத்தை இயக்கிய தியாகராஜன் சிறந்த அறிமுக இயக்குநர் விருதைப் பெற்றுள்ளார். இப்படத்துக்காக கே.எல்.பிரவீண சிறந்த படத்தொகுப்பாளர் விருதைப் பெறுகிறார்.

# மீனவர் படுகொலைச் சம்பவம் இரு நாட்டு பிரதமர்கள் பேச்சு

(புதுடில்லி)

மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கை சட்டப்படி தீர்க்க வேண்டும் என்று இருநாட்டு பிரதமர்கள் பேசியதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்திய மீனவர்கள் இருவர் இத்தாலியக் கடற்படையினரால் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குடன், இத்தாலிப் பிரதமர் மரியோ மான்டி பேசினார்.

இதுகுறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பிரதமர் மன்மோகன் சிங்கை தொடர்பு கொண்ட இத்தாலிப் பிரதமர், இரு மீனவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக தனது இரங்கலை தெரிவித்துக் கொண்டார்.

மேலும், இரு நாடுகளின் உறவுகளை மேம்படுத்தவும் மீனவர்கள பிரச்சினையை சட்டத்தின்படி தீர்க்கவேண்டும் என்றும் இரு நாட்டு தலைவர்களும் வலியுறுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது.


NATIONS' HEALTH IS ITS WEALTH

The Development Lotteries Board has played a dual role of making fortune smile on many thousands of Sri Lankans for well over 25 years and a provider of financial support for higher education, special medical care to needy patients and promotion of cultural and sports activities, by chanelling its profits to the President's Fund to undertake such projects for the welfare of the people.

Buy a Development Lottery today and be a partner of this social obligation.

A WIN FOR YOU
OR FOR OUR COUNTRY





Be a winner with the Development Lottery

DLB
DEVELOPMENT LOTTERY
Enriching Your life

DEVELOPMENT LOTTERIES BOARD
356, Dr. Colvin R. De Silva Mawatha,
Union Place, Colombo 02.
Tel: 2 333 546 - 7 Fax: 2 333 545

C/1318


# சட்டப் பேரவைத் தேர்தல் தோல்வி; பிரதமரை மாற்றும் எண்ணமில்லை

## சோனியா கூறுகிறார்

(புதுடில்லி)

சட்டப்பேரவைத் தேர்தல் தோல்வியால் பிரதமர் மன்மோகன் சிங்கை மாற்றும் எண்ணமில்லை என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கூறியுள்ளார்.

5 மாநிலங்களில் நடைபெற்ற தேர்தலில், மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட உத்தரப் பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ் மிகவும் மோசமான தோல்வியைச் சந்தித்துள்ளது. ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர் தீவிர தேர்தல் பிரசாரம் மேற்கொண்டும் காங்கிரஸ் படுதோல்வி அடைந்திருப்பது அக்கட்சியினரை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: இந்தத் தேர்தல் தோல்வி மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு எந்த விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. தேர்தல் தோல்வி கட்சிக்குப் பாடமாக அமைந்துள்ளது. இது தொடர்பாக தொடர்ந்து கட்சித தலைவர்களுடன் ஆலோசிக்க இருக்கிறேன். இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி எதிர்பார்த்ததைவிட குறைவாகவே மக்கள் ஆதரவைப் பெற முடிந்துள்ளது. இதனைப் பணிவுடன் ஏற்றுக் கொள்கிறோம்

மத்திய அரசு மீது எழுந்த 2ஜி உள்ளிட்ட ஊழல் குற்றச்சாட்டுகளும் தோல்விக்குக் காரணம் என்று எடுத்துக் கொள்ளலாமா என்ற கேள்விக்கு கடுமையாக மறுப்புத் தெரிவித்த சோனியா, ஊழலுக்கு எதிராக காங்கிரஸ் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் போல வேறு எந்தக் கட்சியும் இதுவரை நடவடிக்கை எடுத்தது இல்லை என்று கூறினார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ......................................

முகவரி : ......................................

பிறந்த ஆண்டு : ......................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

......................................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட் டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# ஒசாமா பின்லேடனின் உடல் அமெரிக்காவில் புதைப்பு


## விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவல்

பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்ட ஒசாமா பின்லேடனின் உடல் கடலில் புதைக்கப்படவில்லை என்றும் அவரது உடல் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

உலகெங்கும் உள்ள அமெரிக்கத் தூதரகங்களுக்கும், வெள்ளை மாளிகையில் உள்ள வெளிவிவகாரத் தலைமை அலுவலகத்துக்கும் இடையே நிகழ்ந்த இலட்சக்கணக்கான இரகசிய கேபிள் செய்தி பரிமாற்றங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது விக்கிலீக்ஸ்.

ஸ்ட்ராட்போர் நிறுவனத்தின் இரகசியப் பிரிவின் துணைத் தலைவர் பிரட் பர்ட்டன் தனது அதிகாரிக்கு எழுதியுள்ள மின்னஞ்சலை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது விக்கிலீக்ஸ்.

அதில் பர்ட்டன் எழுதியுள்ளதாவது: பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் கடந்தாண்டு மே மாதம் சுட்டுக் கொல்லப்பட்ட ஒசாமா பின்லேடனின் உடல் அமெரிக்க அரசு கூறியபடி கடலில் புதைக்கப்படவில்லை.




மாறாக அந்த உடல் அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ.யின் விமானத்தில் அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்பட்டது. அந்த உடலைப் பரிசோதனை செய்ய சிஐஏ முடிவு செய்தது.

இதனால் முதலில் டெல்வேர் மாகாணத்தின் டோவர் நகருக்கு சி.ஐ.ஏ.யின் விமானத்தில் அந்த உடல் கொண்டு வரப்பட்டது. பின்னர் மேரிலாண்டின் பெதெஸ்டா பகுதியில் உள்ள இராணுவத்தின் நோய் தடுப்பியல் ஆராய்ச்சி மையத்துக்குக் (Armed Forces Institute of Pathology) கொண்டுசெல்லப்பட்டது என்று கூறியுள்ளார். அந்த உடல் இப்போதாவது புதைக்கப்பட்டுவிட்டதா அல்லது இன்னும் பதப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை.

உலகச் செய்திகள்

## 150 மில்லியன்டொலர் கடனுதவியை பாகிஸ்தானுக்கு வழங்கும் உலக வங்கி




பாகிஸ்தானுக்கு, உலகவங்கி 150 மில்லியன் டொலர், கூடுதல் கடனுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளதாக உலக வங்கியின் பாகிஸ்தானுக்கான இயக்குநர் ராய்செட் பென்மேசவுத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடனுதவி அந்நாட்டின் சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது. பாகிஸ்தான் நாட்டின் அரசு, ஒருங்கிணைந்த தேசிய பாதுகாப்பு திட்டத்தினை ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

பெனாசீர் வருவாய் ஆதரவு திட்டம் என்ற பெயரில் சமூகத்தில் பின்தங்கிய எழை மக்களின் குழந்தைகளின் கல்விக்கும், வறுமை ஒழிப்பிற்கும் நிதி வழங்கிடும் வகையில் இத்திட்டத்தை செயற்படுத்தி வருகிறது.

இதற்காக பாகிஸ்தான் உலகவங்கியிடம் கூடுதல் கடனுதவி கோரியிருந்தது. அதன்படி பாகிஸ்தானின் ஏழை எளிய குடும்பத்தினர் பயன்பெறும் வகையிலும், வீலா-இ-தலீம் எனப்படும் கல்வித்திட்டத்தின் கீழ் 5 வயது முதல் 12 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு கல்வி கற்றுத்தரவும், வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு நிதியுதவி வழங்கிடவும் 150 மில்லியன் டொலர் கூடுதல் கடனுதவி பயன்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அணுசோதனை குறித்து பேசத்தயார் ஈரானின் முடிவை இஸ்ரேல் வரவேற்பு


(ஜெருசலேம்)

ஈரான் தனது அணுசோதனை குறித்து வல்லரசு நாடுகளுடன் பேச்சுவார்த்தைக்கு சம்மதம் தெரிவித்திருப்பதற்கு இஸ்ரேல் வரவேற்றுள்ளது. ஈரான் அணு சோதனை மற்றும் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகள் கண்டனம் தெரிவித்தன. பொருளாதாரத் தடையும் விதித்தது. தற்போது ஈரான், ஐ.நா.வின் 6 வல்லரசு நாடுகளுடன் பேச்சுவார்த்தைக்கு தயார் என இறங்கி வந்துள்ளது.

இந்நிலையில், ஈரானின் பரம எதிரி நாடான இஸ்ரேல், ஈரானின் முடிவினை வரவேற்றுள்ளது. இதுகுறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின்நெட்டன்யாகுவின் பாதுகாப்பு ஆலோசகர் யாகோவ் அமிடோரர் கூறுகையில், ஈரானின் முடிவு மகிழ்ச்சி அளிக்கிறது.

இராணுவ நடவடிக்கையினை தவிர்க்க ஈரான் அணு சோதனையை கைவிட வேண்டும். ஈரான் அணுஆயுதம் தயாரிப்பதை இஸ்ரேல் இன்னும் நம்புகிறது. ஈரானைத் தடுத்து நிறுத்த இராணுவ நடவடிக்கை குறித்து பரிசீலிக்கத்தான் வேண்டும் என்றார். இருந்தாலும், பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண , இன்னும் கால அவகாசம் உண்டு என ஒபாமா கூறியதை மேற்கோள்காட்டினார்.

## "நாட்டை மீட்பதற்கு உயிர்த்தியாகம்" தலாய்லாமா போதனை; சீனா கொதிப்பு



(பீஜிங்)

உயிர்த்தியாகம் செய்தாவது திபெத்தை மீட்போம் என்ற தலாய்லாமாவின் போதனையால் தான் திபெத்தியர்கள் பலர் தற்கொலை செய்து வருகின்றனர் என்று தலாய்லாமாவுக்கு சீனா கண்டனமும், எச்சரிக்கையும் செய்துள்ளது. திபெத்தை சீனா கைப்பற்றி வைத்திருக்கிறது. சீனாவின் ஒரு பகுதி தான் திபெத் என்று சீன ஆட்சியாளர்கள் கூறிவருகின்றனர்.

சீனாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து திபெத்தில் தற்கொலை சம்பவங்கள் நடக்கின்றன. சமீபகாலமாக தற்கொலை சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இது சீன அரசுக்கு கவலையை அளித்துள்ளது. இது பற்றி சீன உயர் அதிகாரி ஜெகாங் கூறியதாவது,

திபெத்தில் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவம் அதிகரித்து வருவது வேதனை அளிக்கிறது. தலாய்லாமாவின் தவறான போதனையில் மயங்கி, தற்கொலை செய்கின்றனர். தற்கொலைக்கு மறைமுக தூண்டுகோலாக இருப்பவர் அவர்தான். சமீபத்தில் சிலர் தங்களுக்கு தாங்களே தீக்குளித்து இறந்தனர்.

பொலிஸ் விசாரணையில் அவர்களில் சிலர் குற்றவாளிகள் என்றும், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிய வந்தது. எனினும், தீக்குளித்து தற்கொலை செய்து கொண்ட இறந்தவர்களின் குடும்பத்துக்கு சீன அரசு உரிய இழப்பீட்டை வழங்கியுள்ளது. மனிதாபிமான அடிப்படையிலேயே இந்த உதவி அளிக்கப்பட்டது. எனவே உயிர்த்தியாகம் என்று பேசி திபெத்தியர்களை தற்கொலைக்கு தூண்ட வேண்டாம் என்று தலாய்லாமாவை எச்சரிக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## நாம் இல்லாமல் தீர்க்க முடியாது

(வொஷிங்டன்)

அமெரிக்கா, சீனா இல்லாமல் சர்வதேச பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது என அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், சீனாவும், அமெரிக்காவும் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது என்றாலும், இந்த இரு நாடுகள் இல்லாமல் சர்வதேச பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்பது சந்தேகமே என்றார்.

## பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு பெரிய தொழிலதிபரின் மனைவி இறந்து விட்டாள். அவளது ஈமச்சடங்குகள் ஒரு பெரிய பொது நிகழ்ச்சி போல நடந்து கொண்டிருந்தது. நகரிலுள்ள பெரிய மனிதர்களும் மற்றவர்களும் வந்து துக்கம் கொண்டாடினர்.

அவர்களிடையே ஒரு புதிய மனிதன் மற்றவர்களை விடக் கவலை கொண்டவனாகக் காணப்பட்டான். சடங்குகள் முடியு முன் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டான். மனைவியை இழந்தவர் கேட்டார்: "தேம்பித் தேம்பி அழும் அந்தப் புதியவன் யார்?" பக்கத்தில் நின்ற ஒருவர் சொன்னார்: "தெரியாதா உங்களுக்கு? இறந்து போன உங்கள் மனைவியின் காதலன் அவன்!"

மனைவியை இழந்தவர் அவனிடம் சென்றார். அவனது தோள்களைத் தட்டிக் கொடுத்தார். பிறகு கூறினார்: "உற்சாகமாக இரு. ஒருவேளை நான் மறுமணம் செய்துகொள்ளக் கூடும்."

*** *** ***

பண்ணையில் பணியாற்றும் ஒரு தொழிலாளிக்கு அவன் வீட்டிலிருந்து தந்தி வந்தது. தந்தியின் வாசகம், அவனது மனைவி நான்கு குழந்தைகள் பெற்றுள்ளதாகச் சொல்லிற்று. எனவே, பண்ணை வேலையை விட இன்னும் அதிக வருமானமுள்ள வேறு வேலை ஒன்றைத் தேட வேண்டும் என்று அவன் தீர்மானித்தான். பல தொழிலகங்களுக்கு விண்ணப்பித்தான். ஒரு தொழிலகத்திலிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது.

வேலையில் நியமிக்கும் நிறுவனத்தின் அதிகாரி அவனிடம் கேட்டார்: "உனக்கு பொருள்களை விற்பனை செய்யும் தகுதி உள்ளதா? தட்டச்சு தெரியுமா? கம்ப்யூட்டரை இயக்கத் தெரியுமா?"

அவன் மிகவும் வருத்தத்துடன் ஒவ்வொரு கேள்விக்கும் "தெரியாது" என்றே கூறினான்.

"அப்படியானால் உன்னால் என்னதான் செய்ய முடியும்?" என்று அதிகாரி கேட்டார்.

உடனே அவன் தன் பையில் வைத்திருந்த – வீட்டிலிருந்து வந்த அந்தத் தந்தியை எடுத்துக் காட்டி, "இதில் தெளிவாக உள்ளது. படித்துப் பாருங்கள்" என்றான்.

*** *** ***

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்தியா வந்தார். அவருக்கு விசேடமான ஒரு கார் கொடுத்திருந்தார்கள். ட்ரைவர் ஓட்டிக் கொண்டு செல்ல அருகிலிருந்த ஒபாமாவுக்கு அந்தக் காரை தானும் ஓட்டிப் பார்க்கும் ஆசை ஏற்பட்டது. ட்ரைவரை பின் சீற்றில் அமரச் சொல்லிவிட்டு, அவர் ஓட்டிச் சென்றார். வேகமாகச செல்ல ஒரு பொலிஸ்காரர் நிறுத்தினார்.

எட்டிப் பார்த்த பொலிஸ்காரர் பதற்றத்தோடு மேலதிகாரிக்கு போனில் பேசினார். "சேர் இங்கே ஓவர்ஸ்பீடில் ஒரு பெரிய மனிதர் மாட்டிக் கொண்டிருக்கிறார்."

"யாரையா பெரிய மனிதர்? எம்.பி.யா?"

"இல்லை சேர், அவருக்கும் மேலே."

"மந்திரியா?"

"இல்லை சேர் அவருக்கும் மேலே"

"கவர்னரா?"

"இல்லை சேர் அவருக்கும் மேலே"

"என்னய்யா பெரிய இழவு... யாரென்று சொல்லித் தொலையேன்"

"தெரியவில்லை சேர். ரொம்ப ரொம்ப ரொம்பப் பெரிய மனிதர். அமெரிக்க ஜனாதிபதியைத் தன் கார் ட்ரைவராக வைத்துக் கொண்டிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்".

*** *** ***

ஒரு லொறி ட்ரைவர் தன் லொறிக்கு ஒருபுறம் நீல வர்ணமும் மறுபுறம் சிவப்பு வர்ணமும் அடித்திருந்தார். ஏன் என்று ஒருவர் கேட்க,

"நான் எங்காவது மோதிவிட்டு நிற்காமல் போய்விட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். பொலிஸ் வந்து அந்த இடத்தில் விசாரிப்பார்கள். சில பேர் நீல வர்ணம் அடித்த லொறி என்பார்கள். சிலர் சிவப்பு வர்ண லொறி என்பார்கள். கடைசியில் பொலிஸார் எதுவும் புரியாமல் கேஸை மூடிவிட்டுப் போய்விடுவார்கள்" என்றார் ட்ரைவர்.

*** *** ***

கடற்கரையில் மிதந்து வந்த சீசாவை எடுத்துத் திறந்த போது பூதம் வெளிப்பட்டது.

"உங்களுக்கு வேண்டுமானதைத் தருகிறேன் பணம், அறிவு, புகழ் மூன்றில் எது வேண்டும்?"

இவர் யோசித்துவிட்டு, "அறிவு வேண்டும்" என்றார்.

"அப்படியே தந்தேன்" என்று பூதம் மறைந்தது.

அவர் வெகுநேரம் யோசித்தபடி மௌனமாக இருந்தார். அவருடைய நண்பர்கள் "தாங்கள்தான் அறிவாளியாகி விட்டீர்களே... என்ன யோசனை?" என்று கேட்டார்கள்.

அவர் மிக மெதுவாக, "ஒன்றுமில்லை... நான் பணம் வேண்டுமென்று கேட்டிருக்கலாம்" என்றார்.

அறிவு வந்ததற்கு வேறென்ன அடையாளம் வேண்டும்.

# கூட்டமைப்பை அரசு பக்கம் இழுப்பது நாட்டிற்கு பேராபத்தை ஏற்படுத்தும்

## எச்சரிக்கிறார் குணதாச அமரசேகர



(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்தி அதன் உறுப்பினர்களை உள்வாங்க அரசாங்கம் கடுமையாக முயற்சித்து வருகின்றது. இந்த நிலையானது அரசியலுக்கு சாதகமாக அமைந்தாலும் நாட்டிற்கு பேராபத்தாகவே அமையும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

ஜெனிவாவிலுள்ள சவால்களை எதிர்கொள்ள அரசாங்கம் தவறான வியூகங்களை வகுத்து வருகின்றது. இலங்கைக்கு எதிரான சர்வதேசத்தின் குற்றச்சாட்டுகளில் இருந்து மீள கூட்டமைப்பினரின் உதவியை நாட நினைப்பது கோழியை பாது காக்க நரியிடம் கொடுத்ததைப் போன்ற விடயமாகும் என்றும் அவர் குறிப் பிட்டார்.

இது தொடர்பாக கலாநிதி குணதாச அமரசேகர மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜெனிவா மனித உரிமைப்பேரவையில இலங்கைக்கு எதிராக அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் கடுமையாகச் செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் முக்கிய காரணமாகும். தனி நாட்டுக் கொள்கையை அரசியல் ரீதியாக மேற்குலக சக்திகளின் ஊடாக நிறைவேற்றிக்கொள்ள சம்பந்தன் குழு செயற்படுகின்றது. இந்த நிலையில் தற்போது அரசாங்கம் கூட்டமைப்பினரை இணைத்துக்கொண்டு ஜெனிவா பிரச்சினையைச் சமாளிக்க முடியும் என்று தவறான சிந்தனையில் செயற்படுகின்றது.

இதற்காக கூட்டமைப்பின் உறுப்பினர்களை எவ்வாறேனும் உள்வாங்க வேண்டும் என்ற போக்குடன் அரசாங்கம் செயற்படுகின்றது. இது நாட்டிற்கு ஒவ்வாத விடயமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டிற்கு நன்மைகளை பெற்றுக் கொடுக்கும் என்று நம்ப முடியாது. ஏனெனில், நாட்டிற்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானங்களை மேற்கொள்ள மேற்குலக நாடுகள் முயற்சிக்கையில் இதற்கு மேலும் துணை போகும் நிலையில் கூட்டமைப்பு 47 நாடுகளுக்கு இலங்கைக்கு எதிராக செயற்படுமாறு கடிதம் எழுதி கேட்டுக்கொண்டுள்ளது.

இவ்வாறு தொடர்ந்தும் நாட்டிற்கு எதிராகச் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசுடன் இணைத்துக் கொண்டு நாட்டைப் பாதுகாக்க முயற்சிப்பது முட்டாள்தனமாகும் என்றார்.

## ஐந்து மிதிவெடிகள் தென்மராட்சியில் மீட்பு



(தென்மராட்சி)
தென்மராட்சி-கோவிலாக்கண்டி பகுதியிலிருந்து ஐந்து மிதிவெடிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை மீட்கப்பட்டதாக இந்தியாவின் இர்கோன் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

பளை முதல் யாழ்ப்பாணம் வரையான ரயில்பாதை அமைப்பதற்கான பணிகளை மேற்கொண்டுவரும் இர்கோன் நிறுவனத்தினர், ரயில் பாதை அமைப்பிற்கான பணிகளை மேற்கொண்ட போதே இவை மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இவற்றை செயலிழக்க இராணுவத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஒட்டுசுட்டானில் மீள்குடியமர்ந்த 3420 குடும்பங்களுக்கு வீடில்லை




(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள 27 கிராம அலுவலர் பிரிவுகளிலும் சுமார் 6ஆயிரத்து 200இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இதனால் தற்போது 3ஆயிரத்து 420 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. ஏனைய குடும்பங்களுக்கு இந்திய அரசின் நிதியுதவி, நேப்திட்டம், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், யூ.என். கபிற்றாட் போன்றவற்றின் மூலம் நிரந்தர வீடுகளும் பகுதித்திருத்த வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதனைவிட 1736 குடும்பங்களுக்கு இதுவரை வாழ்வாதார உதவித்திட்டங்கள் எவையும் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகளவான குடும்பங்கள் வாழ்விட வசதிகளின்றியும் வாழ்வாதார உதவிகளின்றியும் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றன.

எனவே காலம் தாமதிக்காது வீடற்று நிர்க்கதியாகி நிற்கும் குடும்பங்களுக்குரிய வீடுகளைக் கட்டிக் கொடுக்குமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## வவுனியாவில் மரக்கடத்தல்; ஐவர் பொலிஸாரால் கைது



(வவுனியா)
வவுனியாவை அண்மித்த காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்பட்டுவந்த பாரியளவிலான மரக் கடத்தலுடன் தொடர்புடைய ஐந்து சந்தேகநபர்கள் வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நான்கு திடீர் சுற்றிவளைப்புக்களின்போது 60 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கல்மடு, ஈச்சக்குளம், மகாரம்பைக்குளம் மற்றும் தோணிக்கல் ஆகிய பிரதேசங்களில் இந்தச் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேக்கு, வேம்பு உள்ளிட்ட பெறுமதியான மரக்குற்றிகளை சந்தேகநபர்கள் கடத்தியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

## சொகுசு பேருந்துகளின் தரம்; சோதனை நடவடிக்கை ஆரம்பம்



(கொழும்பு)
நாடு முழுவதும் போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து தனியார் சொகுசு பேருந்துகளின் தரம் தொடர்பில் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் காலி மற்றும் கொழும்புக்கு இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளைச் சோதனைக்குட்படுத்தும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்திற்கு தகுதியற்ற சில பேருந்துகள் இந்தச் சோதனையின் போது இனங் காணப்பட்டுள்ளன.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின் ஊடாக பேருந்துகளின் போக்குவரத்து நேரத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

33 பேருந்துகள் நேற்று முன்தினம் மட்டும் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

சோதனைக்குட்படுத்தப்படும் பேருந்துகள் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டு, அதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவிக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாகாணங்களுக்கு இடையில் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பான விதிமுறைகளை ஏற்படுத்துதல் குறித்தும் நடவடிக்கை எடுப்பதற்கு தாம் இணங்கியுள்ளதாக மாகாண பேருந்துச் சங்கத்தின் தலைவர் சரத் விஜித்குமார தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டில் ஊனமடைந்தால் வீடுகளை வழங்கும் அரசு

(கொழும்பு)
வெளிநாட்டில் தொழில்புரியச் சென்று அங்கவீனர்களான இலங்கைப் பணியாளர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிநாடுகளுக்கு தொழில் புரிவோருக்கான நலன்புரி வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார தெரிவித்துள்ளார்.

டோகா - கட்டார் இராஜ்ஜியத்தில் சாரதியாக தொழில்புரிந்த போது திடீர் விபத்தொன்றில் அங்கவீனரான ரத்நபுரி பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு வீடொன்றை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பணியகத்தின் தலைவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

## மாணவர்களுக்கு வழங்க வைத்திருந்த போதையூட்டும் குளிசைகள் கைப்பற்றல்



(கொழும்பு)
பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளின் போது மாணவர்களுக்கு விநியோகிப்பதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த போதையூட்டும் ஒருதொகை மருந்து வகைகள் தேசிய வாசனைத்திரவியங்கள் மற்றும் மருந்து வகைகளை ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு பிரதேச பிரபல வர்த்தகத் தொகுதியொன்றில் இயங்கிவந்த மருந்து விற்பனை நிலையமொன்றில் இருந்து இந்த மருந்துத் தொகை கைப்பற்றப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது. இது குறித்து மிக இரகசியமாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை காரணமாக மருந்துச் சீட்டின்றி போதையூட்டும் ஒருவித மருந்து விற்கப்படுவதாக தகவல்கள் வெளியானதாகவும் அமைச்சு தெரிவிக்கிறது.

இந்த மருந்து விற்பனை நிலையத்திருந்து அத்தகைய 650 மருந்துப் போத்தல்களையும் சுமார் மூவாயிரம் குளிசைகளையும் கைப்பற்றியதாக அமைச்சு தெரிவித்தது. இதுபோன்ற மருந்து வகைகளை போதையூட்டுவதற்காக சிலர் பயன்படுத்துகின்ற போதிலும் அதன் மூலம் சிறுநீரக, சுவாசம் மற்றும் விந்து சார்ந்த பக்க விளைவுகளை எதிர்நோக்கும் அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## தற்காலிக அடையாள அட்டை; விண்ணப்பிக்கும் திகதி நீடிப்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைத் தேர்தலுக்கான தற்காலிக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக அடையாள அட்டை விண்ணப்பிப்பதற்கு மார்ச் மாதம் 10ஆம் திகதிவரை காலம் வழங்கப்பட்டிருந்த நிலையில் அது மார்ச் 17ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

வாக்காளர்கள் தேசிய அடையாள அட்டை இல்லாவிடின் தங்களது கிராம சேவகரைச் சந்தித்து தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்குமாறு பவ்ரல் அமைப்பு புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் தொடர்பில் வாக்காளர்களை விழிப்பூட்டுமாறு பவ்ரல் அமைப்பு அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# சர்வதேச மகளிர் தினம் கிளிநொச்சியில் கோலாகலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தினம் நேற்றுக் காலை 09.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் தொடர்பு பொறுப்பதிகாரி எஸ். ஆர்.ஆரிப்பின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்டத்தில் முதன்மை வகிக்கும் பெண்கள் தெரிவுசெய்யப்பட்டு கௌர விக்கப்பட்டனர்.

இதில் மாவட்ட அரச அதிபர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் மா அதிபர் நீல் களுவத்த, கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பதிகாரி மகேந்திர, மாங்குளம், கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேச உதவிப் பொலிஸ அத்தியட்சகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்கள் விவாத அரங்கு இடம்பெற்றதுடன் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டது. (கே)

# தெரு நாய்களின் தொல்லை அதிகரிக்கிறது மல்லாவியில் 114 பேருக்குச் சிகிச்சை



மல்லாவி ஆதார வைத்திய சாலையில் கட்டாக்காலி நாய்களினால் கடியுண்டு கடந்த மூன்று மாதங்களுக்குள் 114 நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளதாக வைதத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி வைத்தியசாலையில் நாய்க்கடிகளுக்குள்ளாகி கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 7 ஆம் திகதி வரை 114 நோயாளர்கள் அனுமதிகப்பட்டுள்ளனர்.

இதில் ஜனவரி மாதம் 50 நோயாளர்கள், மாசி மாதம் 54 நோயாளர்களும் மார்ச் மாதம் 10 நோயாளர்களும் சிகிச்சை பெற்றனர். இதில் குறிப்பாக 80 வீதம் சிறுவர்களாகக் காணப்படுவதுடன் இடைநிலை வயதினரும் வயோதிபரும் நாய்க்கடிக்கு உள்ளாகிவருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியினால் கட்டாக்காலி நாய்கள் தெருவோரங்களில் அலைந்து திரிவதுடன் சில நாய்கள் வெறிபிடித்துக் கடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (143)

# ஜெனிவா பிரேரணைக்கு உலமாக்கள் சபை கண்டனம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேர்வையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை தெரிவித்துள்ளது. இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இலங்கையின் இறைமையை பாதிக்கின்ற விடயம் என்ற வகையில் அகில இலங்கை ஜம்இய்ய துல் உலமா சபை கடுமையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

அத்துடன், எதிர்வரும் மார்ச் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குத்பாக்களை (பிரசங்கங்களை) இது தொடர்பாக அமைத்துக் கொள்ளுமாறு அனைத்து ஜும் ஆப் பள்ளிவாசல்களையும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக்கொள்வதோடு, நாட்டின் இறைமைக்காகவும், பாதுகாப்புக்காகவும், முன்னேற்றத்திற்காகவும், ஒற்றுமைக்காகவும் அன்றைய தினம் பிரார்த்திக்குமாறும் இலங்கை மக்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் உதவி பொதுச் செயலாளர் அஷ் ஷெய்க். எம்.எஸ். எம்.தாஸிம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'சர்வதேச சமூகத்தின் கவனம் இன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மாநாட்டு கூட்டத் தொடர்கள் மீது திரும்பியுள்ளது. சர்வதேச ரீதியாக இடம்பெற்றுள்ள பல்வேறு மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்ட அல்லது அது பற்றிய எவ்வித அக்கறையும் காட்டாத பல நாடுகள் இன்று இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு சுய இலாபமடைய முற்படுகின்றன.

மேலும் நீண்ட கால உள்நாட்டு இனக் கலவரங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு புதிய சமாதான சூழலை அனுபவிக்க ஆரம்பித்துள்ள இந்நிலையில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இலங்கைக்கு எதிராக சுமத்தப்படுவது இந்நாட்டு மக்களையும், போரை முடிவுக்குக் கொண்டு வர உதவி செய்த நாடுகளையும் அவமதிப்பதாகவே நாம் கருதுகிறோம். மேலும் இக்குற்றச்சாட்டுக்கள் போரினால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் தண்டிப்பதாய் அமையுமே அன்றி, ஒருபோதும் தீர்வாக அமைய மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின்...

வழங்கும் என எதிர்பார்க்கின்றோம். எனவே, இவ்வாறான முயற்சியின் பக்க விளைவாக ஏற்படப்போகும் ஆபத்து குறித்து ஒரு சிறுபான்மை சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அரசியல் கட்சியொன்றின் தலைவர் என்ற முறையில் என்னுடைய பக்க நியாயங்களை ஜெனிவாவில் வைத்துக் கூறியுள்ளேன். சில மேற்கு நாடுகளை பொறுத்தவரை அதனால் எதுவிதமான தாக்கமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அது மிகவும் கவலைக்குரியதாகும். அமெரிக்கா, பிரிட்டன் போன்றவை இலங்கை அரசாங்கத்தோடு நேசபூர்வமாக இந்த விவகாரத்தை அணுகி, அதற்கான போதிய கால அவகாசத்தை தருவதற்கு தவறியிருப்பது இராஜதந்திர ரீதியான தொரு தவறாக விளங்கப் போகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரணத்தில்...

வவுனியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதேவேளை குறித்த மரணத்தில் சந்தேகம் உள்ளதாகப் பலரும் முறைப்பாடு செய்ததை அடுத்து குறித்த சடலம் மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எஸ்)

## முச்சக்கர வண்டி...

இம் முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் ஜே/109 கிராம உத்தி யோகத்தர் பகுதியில் நான்கு பேரும், ஜே/91 பகுதியில் ஒருவரும், யாழ்ப்பாண செயலகப் பிரிவில் இரண்டு பேரும் உடுவில் செயலகப் பிரிவில் மூன்று பேருமாகப் பத்துப்பேர் கிராம உத்தியோகத்தர்கள் மூலமாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான முச்சக்கரவண்டியொன்றுக்கு இரண்டு இலட்சம் ரூபா மானியமாகப் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் வழங்கியுள்ளது. மிகுதி இரண்டு இலட்சமும் மாதம் பன்னிரண்டாயிரம் ரூபா என்னும் கணக்கில் இரண்டு வருடங்களுக்கு முச்சக்கர வண்டி மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலம் பயனாளிகள் நிறுவனத்துக்குச் செலுத்துதல் வேண்டும்.

இவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் யாழ். மோட்டார் திணைக்களத்தினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனப் பணிப்பாளர் திருமதி செல்வி திருச்செந்திநாதன், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி உதயினி நவரத்தினம், திட்ட உத்தியோகத்தர் திருமதி மாலதி உட்பட பலர் கலந்துகொண்டனர். (137)

# இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு யாழில் இருந்து பஸ் சேவை

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்றுப் பிரதேச சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் 24 ஆம திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. குறித்த பிரதேசங்களை வதிவிடமாகக் கொண்ட மக்கள் தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வசித்துவரின் அவர்கள் மேற்படித் தேர்தலில் வாக்களிப்பதற்காக, புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்கு புதுக்குடியிருப்பிலும், கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு முள்ளியவளை நகரத்திலும் வாக்கெடுப்பு நிலையங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக வசித்துவரும் குறித்த பிரதேசங்களுக்கு வாக்களிக்கத் தகுதியான வாக்காளர்கள் தம்மைத் தற்போது வசிக்கும் பகுதியில் உள்ள கிராம அலுவலர்கள் ஊடாகப் பிரதேச செயலர்களிடம் 10.03.2012 இற்கு முன்னதாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரச அதிபரினால் கோரப்பட்டுள்ளது.

மேற்குறித்த தகுதியானவாக்காளர்கள் அனைவரும் குறித்த பிரதேசத்திற்கு வாக்களிப்பதற்குச் செல்வதற்கான பயண ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகத தமது பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளும் படியும் மேலதிக விபரங்களை யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் யாழ். அரச அதிபரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரட்டைப் பதிவு வாக்காளர்கள் 165000 பேர் கண்டுபிடிப்பு

ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் தம்மை வாக்காளர்களாகப் பதிவுசெய்துள்ள 165,000 பேர் தேர்தல்கள் திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக தேர்தல்கள் பிரதி ஆணையாளர் மொஹமட் தெரிவித்துள்ளார்.

இனங்காணப்பட்டுள்ள இந்த வாக்காளர்களுக்கு தேர்தல்கள் திணைக்களத்தினால் அவசர கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்பாக தேர்தல்கள் திணைக்களத்துக்கு உரிய பதிலை அனுப்பி வைக்காதவர் வாக்குப் பதிவு தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு சுயாதீனமாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். நாட்டின் 1 கோடியே 40 இலட்சம் வாக்காளர்களில் 165,000 பேர் வரையிலானோர் இரண்டு அல்லது மூன்று இடங்களில் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளமை நவீன தொழில் நுட்பத்தினடிப்படையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதுவரை மாவட்டங்களின் அடிப்படையிலேயே வாக்காளர் தொடர்பாக ஆராய்ந்ததாகவும், இந்நிலையில் முதல் முறையாக இம்முறையே நாடளாவிய ரீதியில் வாக்காளர் பதிவுமறு சீரமைக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## அமெரிக்காவின்...

ஒன்று தோல்வியடைந்ததாக சரித்திரம் இல்லை எனவும் சுமந்திரன் தெரிவித்தார். மேலும், இலங்கைக்கு எதிராக சர்வதேச சமூகம் போர்க் குற்றச்சாட்டை வைக்கும்போது அது தொடர்பான சர்வதேச விசாரணையை செய்து உண்மையை வெளிக்கொண்டு வந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் நாங்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று சொன்னால் அதனைச் சர்வதேசம் நமபமாட்டாது. சர்வதேச சமூகம் மூன்று வருடகால அவகாசம் கொடுத்திருந்தது. அக்காலப் பகுதியில் அரசு தானே ஒரு விசாரணைக் குழுவை நியமித்து விசாரணைகளையும் நடாத்தி அறிக்கை வெளியிட்டு இருந்தது. ஆனாலும் அதில் கூறப்பட்ட சிபாரிசுகளை அரசு அமுல்படுத்த தயங்குகின்றது. இந்த நிலையிலேயே அமெரிக்கா இலங்கைக்கு எதிரான மேற்படி பிரேரணையை சமர்ப்பித்துள்ளது என விளக்க மளித்துள்ளார்.

## டெங்கு நுளம்பை...

செய்யப்படும் தேசிய பற்றீரியாவையும் பயன்படுத்தலாம் என மருத்துவ நிபுணர்கள் சிபாரிசு செய்துள்ளனர். அதன்படி கியூபாவின் நாட்டின் பற்றீரியாவையும் இறக்குமதி செய்து அவற்றை விற்பனை செய்யும் நடவடிக்கைகளை அரசாங் கம் ஆரம்பித்துள்ளது. இதேவேளை இலங்கையில் தனியார் துறையினர் உற்பத்தி செய்யும் பற்றீரியாவை விற்பனை செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே தனியார் நிறுவனம் விரைவில் தேசிய பற்றீரியாக்களை சந்தைப்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## மாதகலில் மீள்குடியமர்வு...

தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டதுடன் துறைசார்ந்த அதிகாரிகளிடம் விபரங்களைக் கேட்டறிந்து கொண்டார். தொடர்ந்து அப்பகுதியில் அமையப் பெற்றுள்ள தொழிலாளர் ஓய்வு மண்டபத்தில் மக்களுடன் கலந்துரையாடும்போது மீளக்குடியமர்த்தப்படாத பகுதிகளை மீளவும் மக்களிடம் கையளிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததுடன் மக்களுக்கு ஒருபோதும் பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய தீர்வுகள் பெற்றுத்தரப் படுமெனவும் அதற்கு மக்களது பூரண ஒத்துழைப்பு ஒத்தாசையும் முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே இன்னமும் பல காணிகளின் உரிமையாளர்களால் காணிகள் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய அமைச்சர் விரைவில் அவற்றையும் பிரதேச செயலாளர் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அந்த வகையில் அடுத்துவரும் ஒரு மாதகாலத்திற்கு நம்பிகையளிக்கக் கூடிய வகையில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி குறித்த பிரதேசங்களைப் பெற்றுத்தருவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இதன்போது உறுதிமொழி வழங்கினார். அத்துடன் நிம்மதியான வளமான வாழ்க்கையைப் பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கம் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். இதனிடையே காணி உறுதிகள் வைத்திருப்போர் தமது காணிகளை உறுதிப்படுத்த முடியும் எனவும் காணி உறுதிகள் இல்லாதோர் சத்தியக் கடதாசி மூலம் தமது காணிகளை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் தாம் சொல்லும் வரையில் மீளக்குடியமர்த்தப்படாத காணிகளுக்குள் செல்லவேண்டாம் எனவும் களவுகளைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம் என்றும் தெளிவுடுத்தினார்.

# புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் சமூக வழிகாட்டிகளாக வேண்டும்

## வவுனியா அரச அதிபர்

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது வவுனியாவிற்கு வந்த மக்களில் புனர்வாழ்வு தேவைப்பட்ட இளைஞர் யுவதிகளில் தற்போது பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள் பிரதேச செயலர்களிடம் கையளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய நிலையில் மிக மிக கட்டுப்பாடோடு வாழ்ந்த நீங்கள் இன்று சுதந்திரமாக சமூகத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றீர்கள். நீங்கள் எல்லோரும் சமூக வழிகாட்டியாக சமூகத்தை முன்னெடுத்துச் செல்பவர்களாக அனைவருக்கும் சேவை செய்பவர்களாகவும் இருக்க வேண்டும் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற முன்னாள் போராளிகளின் ஏற்பாட்டிலும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் அனுசரணையிலும் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

வன்னிப்பகுதியில் இருந்து வவுனியா நோக்கி மக்கள் வந்த போது பல்வேறு அச்சங்கள் சந்தேகங்கள் ஊடாக ஓமந்தை சோதனைச் சாவடியை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அந்த வேளையில் அந்த ஓமந்தை முன்னரங்க காவலரணில் பொலிஸாரோடும் இராணுவத்தினரோடும் நான் நின்றிருந்தேன்.

அங்கு மக்களைப் பராமரிப்பதற்காக இராணுவத்தினரும் பொலிஸாரும் தங்களாலான உதவிகளையும் செய்துகொண்டிருந்தார்கள். இங்கு வந்த மக்கள் அனைவரும் ஜனாதிபதியின் சிந்தனையின் அடிப்படையில் புனர்வாழ்வுக் கிராமங்களுக்கு உள்வாங்கப்பட்டார்கள் என்றார்.

### ஜெயலலிதாவின் கடிதம் மத்திய அரசின் கவனத்தில்

(புதுடில்லி)

இலங்கை தொடர்பாக ஜெனிவாவில் அமெரிக்கா சமர்ப்பித்திருக்கும் மனித உரிமைகள் தொடர்பான பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா செயற்பட வேண்டும் என்று கோரி இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இதுவரை 2 கடிதங்களை எழுதியுள்ளார்.

அதேவேளை இக்கடிதத்தில் இலங்கை பிரமுகர்களின் தமிழ்நாட்டு விஜயம் குறித்து தமிழக அரசினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் மத்திய அரசின் கவனத்தில் கொள்ளப்படும் என்று இக்கடிதங்கள் குறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கருத்து வெளியிட்டபோது தெரிவித்தார்.

# பாலைதீவு அந்தோனியார் உற்சவம் இன்று ஆரம்பம்

(முழங்காவில்)

பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 11 ஆம் திகதி திருப்பலி பூசையுடன் நிறைவுபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைக் கூட்டம் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்த குமார் தலைமையில் சென்ற வாரம் நடைபெற்றது.

இம்முறை 25000 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுவதால் அவர்களுக்கேற்ற வசதிகளை அளிப்பதற்கான பொறுப்புக்கள் உரிய துறையினருக்கு வழங்கப்பட்டது.

9 ஆம் திகதி முதல் பள்ளிக்குடா, வலைப்பாடு, யாழ்ப்பாணம் துறைகளிலிருந்து படகு மூலம் மக்கள் புறப்படவுள்ளனர்.

உற்சவநாள் திருப்பலி பூசையை வலைப்பாடு பங்குத்தந்தை அருட்திரு சில்வெஸ்ரர் நடத்திவைப்பாரென தெரிவிக்கப்படுகிறது. இவ்ஆலயத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதற்காக கிராஞ்சிப் பகுதி தேசிய இளைஞர் சேவை மன்ற குழுவினர் நேற்று முன்தினம் அங்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 3 நாட்களும் தற்காலிக வைத்தியசாலையும் இயங்கவுள்ளது.

பூரணமான மின்சார வசதியை கடற்படையினர் செய்யவுள்ளனர். உற்சவநாட்களில் பூநகரி பிரதேச செயலரின் விசேட அலுவலகமும் திறந்துவைக்கப்படவுள்ளது. யாத்திரிகர்கள் 12 ஆம் திகதியுடன் திரும்பவேண்டுமென தெரிவிக்கப்படுகிறது. (112)

# 'பெண்கள், சிறுவர்களைப் பாதுகாப்போம்' தேசிய வேலைத்திட்டம் ஆரம்பம்



(கொழும்பு)

சர்வதேச மகளிர் தின பிரதான வைபவம் நேற்றுக் காலை அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

'பெண் சிறார்களைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் இம்முறை நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் உள்ள பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த மூவாயிரம் பெண்கள் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதிலும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும்பெண்களுக்கு எதிரான வன்முறைகள், துஷ்பிரயோகம், கொலை, ஏனைய பெண்களுக்கு எதிரான கொடூரத்தன்மைகளை நிறுத்தி அவ்வாறான செயற்பாடுகளை நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்கான தேசிய வேலைத்திட்டம் முதல் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷவினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாகாண மட்டத்தில் பெண்கள் அமைப்புக்கள் மூலமாக சமூகத்திற்கு பல்வேறு சேவைகளை வழங்கிய தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த ஒன்பது பெண்கள் இந்த நிகழ்வின் போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் 2012 சர்வதேச மகளிர் தின நினைவுச் சின்னத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மற்றும் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோர் கையளித்தனர்.

இந்த வைபவத்தில் பிரதமர் டி.எம்.ஜயரட்ண, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிமன்றம் பிடியாணை

(திருநெல்வேலி)

தொடர்ந்து 5 தவணைகளுக்கு நீதிமன்றுக்கு ஆஜராகத் தவறிய பொலிஸ் அத்தியட்சகர் ஒருவருக்கு யாழ். மேல்நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை இப் பொலிஸ் அதிகாரி பதிவுசெய்திருந்தார்.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 5 தவணைகளுக்கு இவ்வதிகாரி நீதிமன்றுக்கு சமூகம் கொடுக்கவில்லை.

இதனால் அவர்மீது பிடியாணை பிறப்பித்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் வழக்கை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (137)

# எழுச்சியூட்டல் செயலமர்வு

(வவுனியா)

கனெடிய உலக பல்கலைக்கழக சேவைகள் நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தின் முறைசாராக்கல்விப்பிரிவு ஏற்பாடு செய்திருந்த எழுச்சியூட்டும் எதிர்காலத்திற்காக வலுவூட்டும் சக்திகளுடன் பெண்களை இணைப்போம் என்ற தொனிப் பொருளிலான செயலமர்வொன்று கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு நேற்று வலயக் கல்விப்பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

முறைசாராக் கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பால்நிலை தொடர்பான கருத்துக்களை கனெடிய உலக பல்கலைக்கழக சேவைகள் நிறுவனத்தின் பிரதி களப்பணிப்பாளர் துவான் மன்சில் வழங்கி சமத்துவம் சம வாய்ப்பு தொடர்பான கருத்துக்களை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் வவுனியா அலுவலக உத்தியோகத்தர் பத்மினி பாலச்சந்திரன் வழங்கியிருந்தார். (125)

### குறைகிறது கடன்வீதம்

(கொழும்பு)

நாட்டின் கடன் வீதம் 106 இலிருந்து 78 வீதமாகக் குறைவடைந்துள்ளது என சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வாய்மூல பதிலுக்காக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்ப இந்த கடன் வீதம் குறைவடைந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

### உணவுப்பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளுக்கான ஜனவரி - மார்ச் வரையான 3 மாத காலப் பகுதிக்குரிய உணவுப் பொருள் விநியோகம் தற்பொழுது ஆரம்பித்துள்ளதால் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் இப்பொருட்களை ப.நோ.கூ. சங்கங்களில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக்காலப்பகுதிக்கான பணமுத்திரைக்கான கொடுப்பனவினை தங்கள் பிரிவு சமுர்த்தி வங்கி சங்கங்களில் பெற்றுக்கொள்ளுமாறு சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசாங்கத்திற்கு ஆதரவாக திருமலையில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)



மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக கொண்டுவந்துள்ள மனித உரிமை மீறல் பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு எதிராகவும் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நேற்று மாலை 5.00 மணியளவில் திருகோணமலையில் இடம்பெற்றது.

முன்னாள் கூட்டுறவு அமைச்சரும் ஜனாதிபதியின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளருமான நஜீப் அப்துல் மஜீத் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்காவிற்கும் அதன் தோழமை மேற்குலக நாட்டிற்கும் ஒபாமாவுக்கு எதிராகவும் கோஷமிட்டனர்.

# தாம்போதி வேலை இடைநிறுத்தம் கமக்கார அமைப்புக்கள் கவலை

(மல்லாவி)

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான கறுப்பிக்குளம் தாம்போதி வேலைகள் ஒப்பந்தகாரர்களினால் இடைநடுவில் கைவிடப்பட்டமையால் இதனூடான போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாதுள்ளதாக கிராமத்தின் கமக்கார அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.

துணுக்காயிலிருந்து கறுப்பிக்குளம் ஊடாக பாலையடி, பாண்டியன்குளம், நட்டான்கண்டல் பிரதேசத்தை இணைக்கும் தாம்போதி 75 மீற்றர் நீளமாகும்.

தாம்போதி வேலைகள் துரித கதியில் இடம்பெற்றுவந்த நிலையில் தற்போது ஒப்பந்தகாரர்களால் கைவிடப்பட்ட நிலையில் இருந்து வருகிறது.

இதனால் இதனூடாக பயணிப்போர் பல இடர்களை சந்தித்து வருகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடைவிடப்பட்ட இந்த தாம்போதியை திருத்தி போக்குவரத்துக்கு விடுமாறு பொதுமக்களுடன் கமக்கார அமைப்புகளும் வேண்டுகோள் விடுக்கின்றன. (143)

# மரண அறிவித்தல்

## சூசைப்பிள்ளை அகஸ்ரீன்

(அதிபர் கிளி/கிளாலி றோ.க.த.க. பாடசாலை)



கிளாலி, எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகக் கொண்ட சூசைப்பிள்ளை அகஸ்ரீன் அவர்கள் 08.03.2012 காலமானார். அன்னார் அன்ரனிற்றாவின் அன்புக் கணவரும், றெக்சி, றெக்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

T.P: 0779672989
0775540814

கிளாலி, எழுதுமட்டுவாள். (159) தகவல் : குடும்பத்தவர்கள்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.